இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பரிவினால் மீண்டும் ஒரு தடவை ரணிலின் ஆட்சி தப்பிப் பிழைத்திருக்கிறது.
என்றாலும், தமிழ்த் கூட்ட மைப்பு நேற்றுத் தன் கை வரிசை யைக் காட்டி, சாதிக்க வேண்டிய வற்றை சத்தம்

பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 27 வெள்ளிக்கிழமை 12.07.2019 கதிர் 249

# தான் முன்னணியுடன் கூட்டுச் சேர்வதை இந்தியா விரும்பவில்லை என்றார் விக்கி!



## பதவி ஆசைகளுக்கு அப்பாற்பட்ட அரசியல் பேரியக்கம் ஒன்றை உருவாக்க அழைப்பு விடுக்கிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜூலை 12
இந்திய வழிகாட்டுதலில்தான் நீதியரசர் செயற்படுகிறார் என்று நாம் குற்றஞ்சாட்டுகிறோம் என நீதியரசர் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். நீயரசர் விக்னேஸ்வரனை 2018.10.06 அன்றுநாம்சந்தித்தோம்.தன்னைச் சந்தித்த இந்தியத் தூதரக அதி காரிகள், தான் எம்முடன் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்) இணைவதை விரும்பவில்லை என்றும், ஏன் இந்தியா உங்களை எதிரியாகப் பார்க்கின்றது? என்றும்

பக்கம் 11

# கூட்டமைப்பால் ரணில் அரசு மீண்டும் தப்பிப் பிழைத்தது!




கொழும்பு, ஜூலை 12
அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது.
பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 119 வாக்குகளும் கிடைத்தன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
இதனால் இந்தப் பிரேரணை 27 மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்தது.

பக்கம் 11

## இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு அடுத்து நாம் என்ன செய்வது?

### சிந்திக்கவேண்டும் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 12
இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங் குவதை எமது மக்கள் விரும்பவில்லை. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கு மாறு கோரி திருகோணமலையில் எனது வீட்டின் முன்னால் இன்று மக்கள் ஆர்ப் பாட்டம் செய்துள்ளனர்.

பக்கம் 11

## அமைச்சுக் கதிரைகளில் மீளவும் அமரவுள்ள முஸ்லிம் எம்.பிக்கள்!

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 12
ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும்தமதுபதவிகளைஏற்றுக்கொள்வது என நேற்றுத் தீர்மானித்துள்ளனர்.

பக்கம் 11

## துன்னாலை இளைஞன் சுட்டுக்கொலை;

### 2 பொலிஸாரிடமும் ரூ. 50 லட்சம் இழப்பீடு கோருகின்றார் தாயார்

யாழ்ப்பாணம், ஜூலை 12
பருத்தித்துறை, மணற்காடுப் பகுதியில் இளைஞர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப் பட்டமை தொடர்பில் அவரது தாயாரால் 50 லட்சம் ரூபா இழப்பீடு கேட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன் றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 02

## எந்தத் தேர்தலை நடத்தினாலும் பதிலடி கொடுக்க நாங்கள் தயார்



### கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 12
அரசு எந்தத் தேர்தலை நடத்தி னாலும் ஜனநாயக ரீதியில் பதிலடியை வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலை வர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பக்கம் 11



## புலிகளின் தங்கத்தை தேடியோர் ஏமாற்றம்

முல்லைத்தீவு, ஜூலை 12
முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் விடுதலைப் புலி களால் புதைக்கப்பட்டதாக நம்பப் படும் தங்கத்தைத் தேடி தனியார் வீட்டு வளவில் அகழ்வு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பக்கம் 11



## காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி மன்னாரில் போராட்டம்!

மன்னார், ஜூலை 12
காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை கண்டுபிடித்துத் தரக் கோரி யும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளுக்கு நீதி கோரியும் சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில்– வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப் புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பக்கம் 02

## போதைப்பொருள்களுடன் 9 வெளிநாட்டவர்கள் கைது!

### இரண்டு படகுகளும் சிக்கின

கொழும்பு, ஜூலை 12
60 கிலோ போதைப்பொருட்க ளுடன் 9 வெளிநாட்டவர்களை தென் கடலில் வைத்துக் கைது செய்தது இலங்கைக் கடற்படை.
2 மீன்பிடிப் படகுகளில் இவர்கள் செல்லும்போது கைது செய்யப்பட் டுள்ளனர்.

பக்கம் 02



## ஜனநாயகப் போராளிகளை மடக்கினார் தொண்டமான்!

### புதிய கூட்டணி நேற்று உதயம்

கொழும்பு, ஜூலை 12
மலையகம், வடக்கு மற்றும் மேல் மாகாணத்தில் செயற்படும் மூன்று கட்சிகளைக் கொண்ட புதிய கூட்டணி ஒன்று கொட்டகலையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தடியின்றி சாதித்திருக்கிறது என்பது உள்வீட்டுத் தகவல்.

சுமந்திரன் தனது விடாப்பிடி தந்திரோபாயத்தால் ஏதோ ஒன்றை செய்து முடித்திருக்கின்றார்.

விடயத்துக்குள் இறங்க முன்னர், ரணில் ஆட்சி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று மாலை நாடாளுமன்றத்தில் இறுதியாக நடந்த வாக்கெடுப்பு விவரத்தைக் கவனிக்க வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகள் விழுந்தன. எதிராக 119 வாக்குகள். இந்த 119 வாக்குகளில் 14 வாக்குகள் தமிழ்க் கூட்டமைப்பினுடையவை. (கூட்டமைப்பின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் தெரிவான 16 எம்.பிக்களில் வியாழேந்திரன் அரசுக்கு எதிராக வாக்களித்தார். சிவசக்தி ஆனந்தன் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை).

அரசை ஆதரித்து நேற்று வாக்களித்த கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் அதற்கு மாறாக – அரசுக்கு எதிராக - நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக – வாக்களித்திருப்பார்களாயின் 106 – 105 என்ற கணக்கில் அரசு ஒரு வாக்கினால் தோற்கடிக்கப்பட்டு கவிழ்ந்திருக்கும்.

நாடாளுமன்றத்தில் கட்சிகளின் ஆசன எண்ணிக்கை தொடர்பான இந்த அட்சர கணிதக் கணக்கை வைத்துக் கொண்டே நேற்று வெற்றிகரமாக இராஜ தந்திரக் காய்நகர்த்தல்களை முன்னெடுத்தார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுப் பிரச்சினை, கன்னியா வெந்நீரூற்றுச் சிக்கல், ஓமந்தை பிரதேச சபைப் பிரிப்புக் குழப்பம் ஆகியவற்றை முன்நிபந்தனையாக வைத்து நகர்வுகளை முன்னெடுத்தார் அவர்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றால் அதற்குத் தனியான நிதி அதிகாரம் வழங்க வேண்டும். நிதி அதிகாரத்தை வழங்கினாலும் அந்த அதிகாரத்தைச் சட்டரீதியாகப் பிரயோகிக்க கூடிய கணக்காளர் ஒருவர் அதற்கு நியமிக்கப்பட வேண்டும். சட்டரீதியான நிதி அதிகாரங்களைக் கையாளக்கூடிய ஒரு கணக்காளரை நியமிப்பதற்கான உத்தரவை உள் நாட்டலுவல்கள் அமைச்சு வழங்குவதானால், அதற்கு அந்தப் பிரதேச செயலகத்துக்கு முழுத் தகைமையுடைய ஒரு கணக்காளரை நியமிப்பதற்கான ஆளணி சட்ட ரீதியாக இருக்க வேண்டும்.

அத்தகைய பணிநிலை ஆளணியை நிதி அமைச்சின் ஆளணித் தீர்மானக் குழு அங்கீகரித்தால் மட்டுமே அப்படி ஒரு பணி நிலை இடம் சட்ட ரீதியாகும்.

வழமையாக இவ்வாறு ஒரு புதிய பதவிக்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சுப் பரிந்துரைத்து, அதற்கான பணிநிலை ஆளணிக்கு அங்கீகாரம் கேட்டால் நிதி அமைச்சின் உரிய குழு கூடி அந்த அங்கீகாரத்தை வழங்க மாதக் கணக்கில் நாள் எடுக்கும்.

அதனால்தான் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் நடவடிக்கை மூன்று மாத காலத்துக்குள் செய்யப்படும் என முதலில் அரசுத் தரப்பினால் உறுதி கூறப்பட்டதாம்.

ஆனால், இந்த இழுபறிக்கு எல்லாம் நேற்று கூட்டமைப்பு இடமளிக்கவேயில்லை.

நேற்று மாலை அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னர் அந்தப் பணிநிலையை உறுதிப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிட்டால் அரசை எதிர்த்துக் கூட்டமைப்பினர் 14 பேரும் வாக்களிப்பர் என்பது திட்டவட்டமாகவும், மிக உறுதியாகவும், உரத்த பாங்கிலும் பிரமருக்கும் ஏனைய ஐ.தே. கட்சியினருக்கும் உரைத்தார் சுமந்திரன்.

அரசுக்கு வேறு வழியிருக்கவில்லை. ஓடி வந்தார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர. கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு முழுத் தகைமையுடைய ஒரு கணக்காளர் பதவிக்கான பணி நிலையை அங்கீகரித்து, அதற்கு அனுமதியளிக்கும் – நிதி அமைச்சின் சம்பந்தப்பட்ட உயர்குழுவின் – கடிதத்தின் பிரதியை நேற்று வாக்கெடுப்புக்கு சில நிமிடங்களுக்கு முன்னராக அவசர அவசரமாகவும் விழுந்தடித்துக் கொண்டும் எடுத்த வந்து சுமந்திரன் கைகளில் திணித்தார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

அதைப் பார்த்ததும், கூட்டமைப்பின் சக எம்.பிக்களுக்கு கண்ணசைவு வழங்கினார் சுமந்திரன். ரணில் அரசுக்கு ஆதரவாக கூட்டமைப்பின் 14 பேரும் ஏகோபித்து வாக்களிக்க, அரசு தப்பிப் பிழைத்தது.

இந்த முடிவுக்கு கூட்டமைப்பினர் வர முன்னர் மேலும் பல சுவாரஸியங்கள் நடந்தன.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது தொடர்பாக சுமந்திரனுடன் பிரதமர் ரணில் நேற்றுப் பகல் விவாதித்துக்கொண்டிருக்க, அதற்கு எதிராகக் கெம்பிக்கொண்டிருந்த முஸ்லிம் பிரமுகர்களை முஸ்லிம் காங்கிரஸின் ஹரீஸ் எம்.பி. நாடாளுமன்றக் கட்டிடத்துக்குப் பக்கத்தில் இருந்த அறையில் அமர்த்தியிருந்தார்.

அவர்களிடம் போய் பேசும் படி சுமந்திரனை விநயமாக வேண்டினார் ரணில்.

சுமந்திரனும் பக்கத்து அறைக்குப் போனார். எடுத்த எடுப்பிலேயே ஒரு போடு போட்டார்.

*"நாங்கள் (கூட்டமைப்பு) முடிவு எடுத்து விட்டோம். அது தீர்க்கமான முடிவு. யாருக்காகவும் பார்த்திருப்பதில்லை. இன்று வாக்கெடுப்புக்கு முன்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது உறுதிப்படுத்தப்படாவிட்டால் அரசைக் கவிழ்ப்பது என்று தீர்மானித்து விட்டோம். இனி உங்கள் விருப்பப்படி நீங்கள் எதுவும் செய்யலாம். எங்களுக்கு கவலையில்லை"* – என்று சுமந்திரன் போட்ட போடில் கலங்கிப் போயினர் முஸ்லிம் பிரமுகர்கள்.

இன்றைய நிலையில், ரணில் அரசு கவிழ்வதை நினைத்துப் பார்க்க அவர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்த மாதிரி இருந்திருக்கும் போல. அவர்களும் டியூனை மாற்றத் தொடங்கினர். சுமந்திரனை தாஜா செய்யும் போக்குக் மாறினர்.

அவர்களுடன் பேசி விட்டு மீண்டும் பிரதமர் ரணிலிடம் வந்தார் சுமந்திரன்.

*"முஸ்லிம்களிடமும் கூறியாகி விட்டது. அவர்களும் ஒப்புக் கொண்டு விட்டனர். இனி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது தொடர்பான பந்து உங்கள் களத்தில். அதை நீங்கள் சரியான விதத்தில் விளையாடினால் எங்கள் ஆதரவு கிட்டும். இல்லையேல் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர் கொள்வீர்கள்"* – என்று திட்டவட்டமாகவும் உறுதியாகவும் கூறினார் சுமந்திரன்.

பிறகென்ன மயங்கிப் போனார் பிரதமர்...!

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் விகாரை கட்டும் செயற்பாட்டை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை அரச அதிபருக்கு உத்தரவு பறந்தது.

ஓமந்தைப் பிரதேச செயலர் பிரிவைப் பிரிக்கும் விடயத்தில் பெரும்பான்மை இனத்தவருக்கு தனி அலகுப் பிரதேசம் கிட்டும் விதத்தில் நடக்கும் பிரிப்பு முயற்சியை நிறுத்துமாறு வவுனியா அரச அதிபருக்கும் பணிப்புரை விரைந்தது.

பிரதிபலனாக ரணில் அரசு தப்பிப் பிழைத்தது.

இத்தகைய சூடான – இறுக்கமான – தந்திரோபாயமிக்க – அணுகுமுறையை முன்னரே கூட்டமைப்பு கடைப்பிடித்திருந்தால் பற்பல காரியங்களை ஏற்கனவே சாதித்திருக்க முடியும் என்பது எனது கணிப்பீடு.

பற்பல சந்தர்ப்பங்களை முன்னர் தவறவிட்டு விட்டோம் என்பதுதான் மறக்கவொண்ணா வேதனையாகும்!

- மின்னல் -

## ஜனநாயகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் இந்தக் கூட்டணி அமைப்பதற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் ஆகியோர் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களைத் தவிர்ந்த ஏனைய சமூகத்தினருக்குக் கிடைக்கும் அனைத்து வரப்பிரசாதங்களும் தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தத் தேசிய கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தத் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும், இ.தொ.கா சார்பாக பொதுச் செயலாளர் அனுஷா சிவராஜா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் சுரேஷ் கங்காதரன் ஆகியோர் உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர். (ஐ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவினர்கள் மற்றும் மன்னார் பிரஜைகள் குழு இணைந்து ஏற்பாடு செய்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட, கடத்தப்பட்டவர்களின் நூற்றுக்கணக்கான உறவினர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் 'இலங்கை அரசே உண்மையை மறைக்காதே', ஒரு நாள் அது நிச்சயம் வெளிவரும், 'சர்வதேசமே எங்களுக்கான நிரந்தர தீர்வை' இலங்கை அரசிடம் இருந்து பெற்றுத் தாருங்கள், 'அம்மா என அழைக்க என் மகனை திருப்பிக்கொடு', மரண பதிவு வேண்டாம் மகனை தா, இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை திருப்பி தா, இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளும் காணாமல் ஆக்கப்பட்டதோ? உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் காணப்பட்டன.

இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சர்வ மத தலைவர்கள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் மன்னார் நகர சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஆஸியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது இங்கிலாந்து அணி

உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியை 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வீழ்த்திய இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

உலகக் கிண்ணத் தொடரின் 2ஆவது அரையிறுதிப் போட்டி ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்றது. பிரிட்டனில் உள்ள ஹெஜ்பாஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடிய செய்ய முடிவு செய்தது.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஆரோன் பின்ச் ரன் எதுவும் எடுக்காமல் முதல் பந்திலேயே கோல்டன் டக் 0(1) முறையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான டேவிட் வோர்னர் 9 ஓட்டங்களும் வெளியேறினார்.

அடுத்து வந்த ஸ்டீவன் சிமித் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடன் கைகோர்த்த பீட்டர் ஹான்ட்ஸ்கோம் 4 (12) ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினார்.

பின்னர் வந்த அலெக்ஸ் கரே தாடை அடிபட்டாலும் காயத்துடன் 46 (70) ஓட்டங்கள் சேர்த்து விக்கெட்டை இழந்தார். இதையடுத்து வந்தவர்களில் மக்ஸ்வெல் 22 (23) ஓட்டங்களுடனும் மற்றும் மிட்செல் ஸ்டார்க் 29 (36) ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

48ஆவது ஓவர் வரை போராடிய சிமித் 85 (119) ஓட்டங்கள் குவித்தார். 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த ஆஸ்திரேலியா 223 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. இங்கிலாந்து அணியில் கிரிஸ் வோக்ஸ் மற்றும் அடில் ரஹித் தலா 3 விக்கெட்டுகளைச் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 224 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ரோய் – பிராய்சோ ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கியது.

அதனால் இங்கிலாந்து அணி 32.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 226 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுக்களையிழந்து இலகுவாக வெற்றி பெற்றது. (ஐ)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா வழங்கிய புலனாய்வு எச்சரிக்கையைத் தொடர்ந்தே கராச்சியிலிருந்து போதைப் பொருள்களுடன் வந்த இரண்டு படகுகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர் என இந்திய செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம் கராச்சியிலிருந்து இலங்கை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகுகள் குறித்து இலங்கை அதிகாரிகளை எச்சரித்ததைத் தொடர்ந்தே அந்த படகுகள் கைப்பற்றப்பட்டன என இந்திய செய்திச் சேவை கூறியுள்ளது. (ஐ)

## 2 பொலிஸாரிடமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரிடமே இந்த இழப்பீட்டுத் தொகையைக் கொல்லப்பட்ட இளைஞனின் தாயார் கோரியுள்ளார்.

2017ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி பருத்தித்துறை மணற்காட்டு பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலை கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதான யோகராசா தினேஷ் உயிரிழந்தார்.

துப்பாக்கிப் சூட்டுச் சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்ஜீவ் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் அபுதாலிப் மொகமட் முபாரக் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் எதிராகக் குற்றவியல் விசாரணை வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கொல்லப்பட்ட யோகராசா தினேஷின் தாயாரான யோகராசா செல்வம், தனது மகனின் சாவுக்குக் காரணமானவர்கள் எனப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் குறிப்பிட்டு அவர்களிடமிருந்து ரூபா 50 லட்சத்தை இழப்பீடாகப் பெற்றுத் தருமாறு கோரி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வீரகத்திப்பிள்ளை கௌதமன் ஊடாக மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளாக துப்பாக்கிச் சூட்டை நடத்திய அபுதாலிப் மொகமட் முபாரக், முதலாவது பிரதிவாதியாகவும், துப்பாக்கிச் சூட்டை நடத்த உத்தரவிட்ட உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்ஜீவ் இரண்டாவது பிரதிவாதியாகவும், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மூன்றாவது பிரதிவாதியாகவும், பொலிஸ் மா அதிபர் நான்காவது பிரதிவாதியாகவும், சட்ட மா அதிபர் 5ஆவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யோகராசா தினேஷ் மீதான துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு எந்தவொரு சட்ட ரீதியான காரணமும் இல்லாமல் கண்மூடித்தனமாகவும் சட்டவிரோதமாகவும் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போது கொல்லப்பட்ட இளைஞனுக்கும் பாரவூர்தியில் பயணித்த ஏனையோருக்கும் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய காயத்தை ஏற்படுத்தும் என்று தெரிந்திருந்தும் அதுபற்றி எந்தவொரு அக்கறையோ, கவனமோ இல்லாமல் வேண்டுமென்றும் விசமத்தனமாகவும் அது மேற்கொள்ளப்பட்டது. அதனால் எனது மகனின் உயிரிழப்புக்கு முதலாவது பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் பொறுப்பானவர்களாவர் என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

யோகராசா தினேஷ், உயிரிழப்பு நிகழ்வதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் வெளிநாடு ஒன்றில் பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பியிருந்தார். அதன்பின் ஒரு தொழிலாளியாகத் தனது உடல் உழைப்பால் தாயாரின் வாழ்வாதாரத்துக்கு பொறுப்பாளியாகவிருந்தார்.

பல வருடங்களுக்கு முன் கணவரையிழந்த மனுதாரர், கொல்லப்பட்ட தினேஷின் உழைப்பிலேயே தங்கியிருந்தார். மகன் கொல்லப்பட்ட பின்னர் மன உளைச்சலுக்கும் மனத் துயருக்கும் உள்ளாகியுள்ள மனுதாரர் வாழ்வாதாரத்துக்கு வழியின்றி அநாதையாக்கப்பட்டுள்ளார்.

அதனால் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளும் மனுதாரருக்கு 50 லட்சம் ரூபா இழப்பீட்டை வழங்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. (அ)

# சமஷ்டித் தீர்வுக்கு ஆணை பெற்றவர்கள் சலுகைகளைப் பெற்று அரசுக்கு முண்டு!

## கூட்டமைப்பைச் சாடுகின்றார் சிவசக்தி ஆனந்தன்

வவுனியா, ஜூலை 12
சமஷ்டித் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறி மக்களின் ஆணையைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கம்பெரலிய, பனை நிதியம் போன்ற அற்பசொற்ப சலுகைகளைப் பெற்று இந்த அரசுக்கு முண்டுகொடுத்து வருகின்றது எனச் சாடியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சபையில் மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடகம் அரங்கேற்றப்படுகிறது. இந்தச் சபை அரசியல் நிர்ணயச் சபையாக மாற்றப்பட்டதும், பின்னர் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை கையளிக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகளும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை இழுத்தடிப்பதற்காக அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட நாடகம் என்பது தெளிவாகிறது.

இதுவரை காலமும் இந்நாட்டில் மாறிமாறி ஆட்சி செய்துவந்த கட்சிகளும் அரசுகளும் ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தத் தவறிவிட்டனர் என்று சுயவிமர்சனம் செய்து இந்நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசு என்ற பெயரில் ஆட்சி அமைத்தன. இதன் பயனாகச் சர்வதேச சமுதாயத் திடமும் இந்த ஆட்சிக்கு நற்பெயர் கிட்டியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியிருந்தது.

ஆனால் கடந்த நான்கரை வருட காலப்பகுதியில் இந்த அரசு எமது தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவைப் பெற்றுக்கொண்ட இந்த அரசு கடந்த ஆட்சியாளர்களைக் காப்பதிலும் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை இழுத்தடிப்பதிலேயுமே இன்னமும் குறியாக இருக்கின்றது.

அரசு நாட்டு மக்களுக்கு – குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு – வழங்கிய வாக்குறுதிகளுக்கமையப் பெற்றுக்கொண்ட மக்களின் ஆணைகளிலிருந்து விலகிச் சென்றுள்ளது. அதனைப் போன்றே புதிய அரசினூடாக புதிய அரசமைப்பைத் தயாரித்து தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என்று வாக்குறுதி அளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. நாளாந்த பிரச்சினை தொடக்கம் அரசியல் தீர்வுவரை அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அரசுக்கு உரிய அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தவறி அதுவும் மக்களின் ஆணையை மீறியுள்ளது.

சமஷ்டித் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கம்பெரலிய, பனை அபிவிருத்தி நிதியம் போன்ற அற்பசொற்ப சலுகைகளைப் பெற்று இந்த அரசுக்கு முண்டுகொடுத்து வருகின்றது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் நாம் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். பிரதமரும் அதனைத் தனது செயலாளருக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார். நாம் குறிப்பிட்ட எந்த விடயத்தையும் பிரதமர் நிறைவேற்றவில்லை. அவரது பதவி காப்பாற்றப்பட்டதன் பின்னரே திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வென்னீரூற்று மற்றும் முல்லைத்தீவின் நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் புத்தர் சிலையை வைத்து அதனை வலுக்கட்டாயமாகப் பௌத்தசமய வழிபாட்டிடமாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பொறுப்புக்கூறல், காணிகளை விடுவித்தல் தொடர்பில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை நாம் சுட்டிக் காட்டியபோது தான் ஆவன செய்வார் எனப் பிரதமரும் உறுதியளித்திருந்தார். ஆனால் அவை எவையுமே நடைபெறவில்லை.

அரசியல் கைதிகள் விடயத்தில் ஒருவித அணுகுமுறையையும் தனது பாதுகாப்புத்தரப்பினர் விடயத்தில் வேறுவித அணுகுமுறையையும் இந்த அரசு கடைப்பிடிக்கிறது. முன்னர் குற்றமிழைத்தவர்கள் எத்தகைய பதவிநிலையில் இருந்தாலும் அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்போம் என்று கூறியவர்கள் பின்னர் ஒரு சிப்பாயைக் கூடச் சட்டத்தின் முன் நிறுத்த இடமளிக்க மாட்டோம் என்று தெளிவாகக் கூறிவருகின்றனர். அதனையே நடைமுறைப்படுத்தவும் செய்கின்றனர். எனவே எமது மக்களுக்கான நீதி உள்நாட்டில் கிடைக்காது என்பது தற்போது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு விடயத்திலும் இதய சுத்தியுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்



லப்போனால் இது சிங்கள நாடு என்றும் ஏனையவர்கள் அவர்கள் தயவில் தங்கியிருக்க வேண்டியவர்கள் என்றும் பௌத்தபிக்குகள் பிரசாரம் செய்கின்றனர். அவர்களின் பிரசாரத்திற்கு இன்றுவரை இந்த அரசு பதில் வழங்கவில்லை.

வடக்கு – கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் நாம் முன்வைத்த சில நல்ல திட்டங்களைக்கூட இந்த அரசு முன்னெடுக்க விரும்பவில்லை. கடந்த முறை பிரதமரை ஆதரிப்பதற்காக நானும் எனது கட்சியின் தலைவரும் முன்வைத்த நிபந்தனையின் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வழங்கிய ஆதரவினாலேயே இன்றைய அரசு இன்னமும் பதவியில் தொடரமுடிகிறது.

ஆனால் அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்ட பிரதமரும் அவரது தலைமையிலான அமைச்சர்களும் எமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையோ அல்லது வலுக்கட்டாயமான பௌத்தமயமாக்கலையோ அல்லது அரச திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்களையோ தடுக்க முடியாதவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் இந்த அரசு தொடர்ந்தும் பதவியில் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? எமது பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றுவிட்டு எமது மக்களின் நலனில் அக்கறை செலுத்தாத அரசை ஏன் நாம் காப்பாற்ற வேண்டும்?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் பொதுத் தேர்தலின்போதும் நல்லாட்சியூடாக நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்றும் அனைவரும் நாட்டுப்பற்றுடன் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியாளர்களையும் படையினரையும் காப்பாற்றிவிட்ட திருப்தியில் நீங்கள் தனித்தனியாகப் பிரிந்து நின்று இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைப் புறக்கணிக்க முயல்கின்றீர்கள்.

இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நீடித்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும் என்பதற்காகவே நாமும் எமது வாக்கினை உங்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம். ஆனால் நீங்கள் உங்கள் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து நாட்டைப் பற்றியும் விளிம்பு நிலையில் இருக்கும் தமிழ்த் தேசிய இனம் பற்றியும் அக்கறை இல்லாமல் இருக்கிறீர்கள். எனவே நீங்கள் பதவியில் இருப்பதும் இல்லாதிருப்பதும் எங்களைப் பொறுத்தவரை ஒன்றே. இந்த அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டிய எந்தவொரு தேவையும் எமக்கில்லை என்பதை இந்தச் சபையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி ஆணையைப் பெற்றுக்கொண்ட எவரும் இந்த அரசை ஆதரித்து வாக்களிக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி வாக்களித்தால் அவர்களுக்கு வேறு தேவை இருப்பதாகவே பொருள்படும் – என்றார். (ஐ)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு கொடுப்பனவு கிடைக்கவில்லை!

## அரைகுறை நிலையில் கட்டடப் பணிகள்

கிளிநொச்சி, ஜூலை 12
கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு முதல்கொடுப்பனவைத்தவிர வேறு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படாமையால் வீடுகளைக் கட்டி முடிக்கமுடியாமல் மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாகப் பாதிக்கப்பட்டு வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 2,613 குடும்பங்களில் 2,315 குடும்பங்கள் வீட்டுத்திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இதில் 1,235 பயனாளிகளுக்கு வீட்டத் திட்டத்துக்கான முதற் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் முதற் கொடுப்பனவைப் பெற்றவர்கள் தொடர்ந்தும் வீட்டைக் கட்டிக் முடிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

அத்தோடு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மாதிரி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு வீடமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போதும் அவற்றையும் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதுள்ளது. இதனால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எப்போது அடுத்த கட்ட நிதி விடுவிக்கப்படும் என்று தெரியாத நிலையில் பயனாளிகள் காணப்படுகின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளரி. சுபாஸ்கரனைத் தொடர்பு கொண்டு வினவியபோது –

நிதியைப் படிப்படியாக விடுவிப்பதில்தாமதம் ஒன்று ஏற்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்திலிருந்து போதுமான நிதி கிடைக்கப் பெறவில்லை. இதனாலேயே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. நிதி கிடைத்ததும் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்குக் கிரமமாக நிதி வழங்கப்படும். இந்த நிலைமை எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகிறது – என்றார். (ஐ)

# திருகோணமலைத் துறைமுகத்தை யாருக்குமே கொடுக்கமாட்டோம்!

## பிரதமர் ரணில் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 12
திருகோணமலைத் துறைமுகத்தைச் சீனாவுக்கோ, அமெரிக்காவுக்கோ, இந்தியாவுக்கோ கொடுக்கப் போவதில்லை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவுக்குக் கொடுத்தாலும் கூட அவர்களின் பாரிய கப்பல்களைக் கொண்டு வரவோ விமானங்களைத் தரையிறக்கவோ முடியாது. அதற்கான வசதிகள் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது அனுர குமார திசாநாயக மற்றும் பந்துல குணவர்தன ஆகியோர் இலங்கை – அமெரிக்கஉடன்படிக்கைகுறித்து கேள்வி எழுப்பியபோது அதற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒரே ஒரு சோபா உடன்படிக்கை மட்டுமே உள்ளது. நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கை தவிர இது இராணுவ உடன்படிக்கையோ யுத்த கால கட்ட உடன்படிக்கையோ இல்லை. இது 1996 ஆம் ஆண்டு அப்போது இலங்கையில் உள்ள அமெரிக்கக் காரியாலயம் மூலமாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்ககாலத்தில் இது கைச்சாத்திடப்பட்டு இன்றுவரை அது கொண்டு செல்லப்படுகின்றது. இதனை நான் நாடாளுமன்றதில் சமர்ப்பிக்கிறேன். இந்த ஓர் உடன்படிக்கை தான் எம்மிடம் உள்ளது. வேறு புதிய உடன்படிக்கை எதுவும் எம்மிடம் இல்லை.

அதேபோல் மஹிந்த ராஜபக் ஆட்சியில் அக்சா என்றஉடன்படிக்கைசெய்து கொள்ளப்பட்டது. அது 2017 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அதனை மீண்டும் புதுப்பிக்கப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனையும் சபையில் முன்வைக்கிறேன். இது தவிர வேறு ஓர் உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவில்லை.

எதிர்க்கட்சி பொய்யான காரணிகளைக் கூறி குழப்புகின்றது. ஆனால் உண்மை அதுவல்ல. நாம் புதிதாக உடன்படிக்கை எதையும் செய்யவில்லை. ஆனால் பேச்சுகள் பல முன்னெடுக்கப்படுகின்றன. இதில் பல காரணிகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சிலவேளைகளில் இது எமக்கு ஏற்புடையதாக இருக்கும், சிலவேளைகளில் ஏற்றுகொள்ள முடியாது – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கூட்டமைப்பை வலுப்படுத்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

**எடுத்ததற்கு எல்லாம் விடுதலைப் புலிகளை முன்னிறுத்தி, தங்களை முழுத் தமிழ்த் தேசியவாதிகளாக வெளிப்படுத்தி - தாங்கள் மட்டுமே தமிழ்த் தேசியம் பற்றி சிந்திப்பவர்கள், கவலைப்படுபவர்கள் என்று காட்டிக் கொண்டு - அரசியல் செய்யும் சில பிரகிருதிகள் புலிகளின் பெயரால் தமிழினத்தை நடுவீதிக்குக் கொண்டு வந்து விடுவார்களோ என்ற சந்தேகம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது.**

**ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு, யதார்த்தப் புறநிலைகளை உணர்ந்து, அதற்கேற்ப அரசியல் காய்களை நகர்த்துபவனே தனது மக்களை வழிநடத்துவதற்குத் தகுதியான அரசியல் தலைவனாக முடியும்.**

**கள யதார்த்தைப் புரிந்து கொள்ளாமல், கொள்கைப் பற்று பற்றிய கற்பனைப் புறவுலகில் கனவு கண்டபடி, அரசியல் சித்தாந்தம் பேசுவது அபத்தமானது; அர்த்தமற்றது.**

**தமிழ்த் தேசத்தின் மீதான குரூர ஒடுக்குமுறையின் ஆபத்துக்களையும் அதன் தீவிரத்தையும் புரிந்து கொண்டு, அத்தகைய அழிவு சக்திகளுக்கு நம் தமிழர் மத்தியில் இருந்தே துணை போகும் தரப்புகளை முறியடிப்பதற்கு தமிழர் மத்தியில் உள்ள நேசத் தரப்புகளை ஒன்றுபடுத்தி, ஐக்கியப்பட்டு, மேலெழுவதே இன்றைய அவசர - அவசிய - கட்டாய - நிலைமை என்பதை இத் தரப்புகள் வேண்டுமென்றே உணர மறுத்து, அரசியல் நடிப்பு மேற்கொள்கின்றமை நகைப்புக்குரியது.**

**கள யதார்த்தத்தைப் புரிந்து கொண்டமையால்தான் காலங்காலமாக பரம அரசியல் எதிரிகளாக இருந்த தந்தை செல்வாவும், ஜீ.ஜீ. பொன்னம்பலமும் வேறுபாடுகளை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாய் ஒன்றிணைந்தனர்.**

**விடுதலைக்கான இராணுவப் போராட்டத்தில் துரோகிகளாக அடையாளம் கண்டவர்களைக் கூட தமிழ்த் தேசியக் கூட்மைப்பு என்ற அரசியல் நேச சக்திகளாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அரவணைத்தமை மட்டுமல்லாமல், அதன் மூலம் சம்பந்தப்பட்டோருக்கு தமிழர்கள் மத்தியிலே நிரந்தர அரசியல் அந்தஸ்தையும் அவர் பெற்றுக் கொடுத்தமையும் கூட அதற்காகத்தான்.**

**'ஐக்கியம் முக்கியமான' சமயத்தில் பிளவுகளுக்கும், பிரிவுகளுக்கும், வேறுபாடுகளுக்கும் காரணம் தேடுவதும், விளக்கங்களை முன்வைப்பதும் அரசியல் அற்பத்தனமும் பொறுப்பற்ற போக்குமாகும்.**

**இதனையே ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

***"முரண்பாடுகளைக் கருதி கொள்ளாது, காலத்தின் தேவைக்கேற்ப, கூட்டு அணியின் அவசியம் கருதி, புலிகள் கூட்டமைப்பை உருவாக்கியமை போலவும், அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த தந்தை செல்வநாயகமும், ஜீ.ஜீ. பொன்னம்பலமும் இணைந்து கூட்டணியை உருவாக்கியது போலவும் இன்றைய சூழலில் கூட்டு ஒன்று தேவைப்படுகின்றது. இந்தப் பாடங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புரிந்து கொள்ள வேண்டும்."* - என்று சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான - எதிரான - ஒரு தமிழர் தலைமை தேவை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்துகின்றமை உண்மையானால் -**

**தமிழ் மக்களின் ஒட்டு மொத்த நலனைப் புறந்தள்ளி குறுகிய கட்சி நலன்களை முதன்மைப்படுத்தும் போக்கிலிருந்து அது வெளியே வரவேண்டும்.**

**அப்படி வெளியே வந்தால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான பரந்த - விசாலமான - தமிழ்க் கூட்டுத் தலைமை ஒன்று சாத்தியமாகும்.**

**அதைவிடுத்து, ஏட்டுச் சுரக்காய்போன்று நடைமுறைக்குச் சாத்தியமில்லாத கொள்கைப் பற்றுக் குறித்துப் பீற்றித் திரிவதும் -**

**தங்களை மட்டுமே 24 கரட் தங்கம் போலவும், ஏனைய தரப்புகள் எல்லாம் கலப்பு உலோகங்கள் எனவும் கருதி, அரசியல் கனவுலகில் தத்துவம் பேசிக் கொண்டிருப்பதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான ஒரு வலுவான சக்தியாக உருவாக இடமளிக்கமாட்டாது என்பது மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனித்து ஏகோபித்த சக்தியாக வளர்த்தும் விடும்.**

**இது புரியாமல் கற்பனாவாதத்தில் திகழ்வது அரசியல் தப்பிலித்தனம்தான்!**

# யாழ். நிதி நிறுவனத்தில் மோசடி; மூவரின் பிணை மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றால் தனிநபர் ஒருவருக்கு சுமார் 11 கோடி ரூபா முற்பணம் வழங்கி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டு வழக்கில் அந்த நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் உள்ளிட்ட மூவர் சார்பான பிணை விண்ணப்பத்தை நிராகரித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நகரில் நீண்ட காலமாக இயங்கிவரும் நிதி நிறுவனம் ஒன்றால், மாதகலைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு சுமார் 10 கோடி ரூபா பணம் மீற்றர் வட்டிக் கணக்கில் மோசடியாக வழங்கப்பட்டது. அதனை நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், அடகுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து தங்க நகை அடகு மீதான முற்பணம் எனக் கணக்குக் காட்டியுள்ளனர்.

எனினும் நிதி நிறுவனத்தின் கணக்காய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணையில் வர்த்தகருக்கு வழங்கப்பட்ட முற்பணத்துக்கு உரிய நகைகள் அடகுப் பிரிவிடம் இருக்கவில்லை. அது தொடர்பில் கணக்காய்வுப் பிரிவால், நிதி நிறுவன முகாமைத்துவத்துக்கு அறிக்கையிடப்பட்டது.

சுமார் 6 மாதங்கள் இந்தப் பணம் தனிநபர் ஒருவருக்கு எந்தப் பொறுப்பும் பெறப்படாமல் மோசடியாக வட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. அதுதொடர்பில் உரிய பணம் மற்றும் வட்டி அடங்கலாக சுமார் 11 கோடி ரூபா பணத்தை வர்த்தகரிடமிருந்து மீள அறவீடு செய்யுமாறு யாழ்ப்பாணக் கிளை முகாமையாளருக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் கால அவகாசம் வழங்கியிருந்தது.

எனினும் உரிய காலத்துக்குள் பணம் மற்றும் வட்டியை மீள அறவீடு செய்வதற்குக் கிளை முகாமையாளர் தவறிவிட்டதால், அவருக்கு எதிராகக் கொழும்பு பெரும் நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு நிதி நிறுவனத்தின் முகாமைத்துவம் முறைப்பாடு வழங்கியது.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பெரும் நிதி மோசடிகள் பொலிஸ் விசாரணைப் பிரிவு, யாழ்ப்பாணக் கிளை முகாமையாளரைக் கைது செய்தது. முகாமையாளரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை முற்படுத்தினர். மேலும் அடகுப் பிரிவில் பணியாற்றிய ஆண் உத்தியோகத்தர் ஒருவரும் பெண் உத்தியோகத்தர்கள் இருவரும் பெரும் நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் பெண் உத்தியோகத்தர்கள் இருவருக்கு பிணை வழங்கிய நீதிமன்று ஆண் உத்தியோகத்தரை விளக்கமறியலில் வைத்தது.

அத்துடன், பணத்தை மோசடியாகப் பெற்று அதனை அறவீடு செய்யாமல் தலைமறைவாகியிருந்த மாதகலைச் சேர்ந்த வர்த்தகரும் பெரும் நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவினரால் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்டார். அவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு வந்தது.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், உத்தியோகத்தர் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர் ஆகிய மூவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அத்துடன், மூன்றாம், நான்காம் சந்தேகநபர்களான பெண் உத்தியோகத்தர்கள் இருவரும் மன்றில் முன்னிலையாகினர்.

நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர், உத்தியோகத்தர் மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர் ஆகிய மூவர் சார்பில் முறையே சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், வீரகத்தி பிள்ளை கௌதமன், ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்து நீண்ட சமர்ப்பணத்தை முன் வைத்தனர்.

எனினும் இந்த மோசடி தொடர்பான விசரணைகள் இடம்பெற்று வருவதனாலும் மேலும் பலர் கைது செய்யப்படவேண்டி உள்ளதாலும் சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்க பெரும் நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவு பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர். அதனால் சந்தேக நபர்களின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், அவர்கள் மூவரினதும் விளக்கமறியலையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். (ஐ-07)

# ரத்துபஸ்வல விசாரணைக்கு மூன்று நீதியரசர்கள் குழாம்!

## அமைக்குமாறு சட்டமா அதிபர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான வழக்கை விசாரிக்க மூன்று நீதியரசர்கள் அடங்கிய நீதிபதிகள் குழாமை நியமிக்குமாறு சட்டமா அதிபர் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கம்பஹா மேல்நீதிமன்றத்தில் இந்த நீதியரசர்கள் அடங்கிய நீதிபதிகள் குழாமை நியமிக்குமாறு நேற்றுமுன் தினம் சட்டமா அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் கம்பஹா, வெலிவேரிய பிரதேசத்தைச் சேர்ந்த ரத்துபஸ்வல கிராம மக்கள் தங்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தமையுடன் மேலும் பலர் காயமடைந்திருந்தனர்.

இந்த நிலையில் நல்லாட்சி அரசு பதவிக்குவந்தபின்னர் இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, சூடு நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட நான்கு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்களைக் கொலைசெய்தமை, மேலும் பலரைக் கொலை செய்ய எத்தனித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மொரட்டுவை பல்கலையில் தீ

கொழும்பு, ஜூலை 12

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து ஏற்பட்டபோது பல மாணவர்கள் அந்த இடத்தில் இருந்தாலும் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன எனத் தீயணைப்புப் படையின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## நாளை

13.07.2019
சனிக்கிழமை

நட்சத்திரம்: அனுசம் மு.இ. 7.05 வரை
திதி : துவாதசி பி.இ. 2.31 வரை
இராகுகாலம் : 2.59 - 4.29
சுப நேரம் : 8.59 - 10.29

# வடக்கின் 12 துறைகளுக்கு கிடைத்தது தங்கப் பதக்கம்





யாழ்., ஜூலை 12

நாடாளுமன்ற அரச கணக்காய்வுக்குழுவின் மதிப்பீட்டுக்கு அமைய வடக்கு மாகாண சபைக் குட்பட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் கள்என12துறைகளுக்கு தங்கப் பதக்கம் கிடைக் கப் பெற்றுள்ளது.

அமைச்சுக்கள் மற் றும் திணைக்களங்களுக்குரிய தங்கப் பதக்கங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனிடம் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற அரச கணக்குக்குழுவினால் 2017ஆம் ஆண்டுக்கான அரச அலுவலகங்கள், நிதி கோட்பாடுகளுக்கு இணங்குதலுக்கான மதிப்பீட் டுச் செயற்பாட்டில் வினைத்திறனாகச் செயற்பட்ட மைக்காக வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 12 துறைகளுக்கு ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த 5ஆம் திகதி தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் நானாட்டான் பிரதேச சபைக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டது.

இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் களை ஊக்குவிக்கும் விதமாக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுமுன்தினம் கைதடி முதல மைச்சர் அமைச்சு செயலகத்தில் அமைச்சுக்களின், செயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர்க ளுக்கு தனது ஊக்குவிப்பு மற்றும் வாழ்த்துச் செய் தியை வழங்கினார்.

மேலும், 2017 ஆம் ஆண்டில் வடமாகாண ஆளுநராகச் செயற்பட்ட றெஜினோல்ட் குரே மற் றும் வட மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட் டோரையும் ஆளுநர் இதன்போது பாராட்டினார். (ஐ – 07)

# ரணில் அரசை இம்முறையும் காப்பாற்றினால் மக்களிடமிருந்து நிச்சயம் அந்நியப்படுவோம்

## கூட்டமைப்புக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**ஜே.வி.பியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்ற நியாயமான கோரிக்கைகள் ஈழத் தமிழ் மக்கள் சார்பில் இருந்தபோதும் கூட இன்னமும் எஞ்சியிருக்கும் காலத்தில் ஒரு சில விடயங்களையாவது ஆற்றியிருப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற ஒரு சில மக்களின் எதிர்பார்ப்பையும் ஈடு செய்யக் கூடிய விதத்தில் இந்தப் பிரேரனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் நடுநிலை வகிக்க வேண்டும்.**



–மேற்கண்டவாறு தெரிவித்திருக் கிறார் அந்தக் கட்சியின் அரசியல் தலைவரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம்.

நடுநிலை வகிக்கும் நிலைப்பாட் டைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்காமல், அரசைக் காப்பாற்றும் வகையில் ஆதரவாக வாக்களிப்பார்களாயின் மக்கள் மத்தியிலிருந்து கூட்டமைப்பு தூக்கி வீசப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக வும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ்.அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மக்கள் விடுதலை முன்னயினால் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில் லாப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடைபெற இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் உட்பட முழு நாடும் கூட்டமைப்பின் முடிவு என்ன என்பதை அறிவதற்கு மிக ஆவலாக இருந்துகொண்டிருக்கின் றனர்.

2015 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி புரியும் நல்லாட்சி அரசு என்று ஜனாதிபதித் தேர்தலிலும் அதனைத் தொடர்ந்து நாடாளுன்றத் தேர்தலி லும் அரசுக்குக் கூட்டமைப்பு ஆதரவ ளித்தது. அதேபோல் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் நடந்த சதிப் புரட்சியின்போது கூட்டமைப்பு அர சைக் காப்பாற்றியது.

ஆயினும் கடந்த ஏழு மாதங்க ளாக தமிழ் மக்கள் எதிர்பார்த்த எதிர் பார்ப்புக்களிலே மிகப்பெரிய அளவில் எதுவும் நடக்காத ஓர் ஏமாற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதி லும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை, கட்டாயமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் பிரச் சினை, காணிகள் விடுவிப்பு, இராணுவ முகாம்கள் குறைப்பு, அரசியல் தீர்வு ஆகியவற்றுக்கு எந்த ஒரு தீர்வும் கிட்டவில்லை. அத்தியாவசியமான தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலைமையுள்ளது.

உதாரணமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நிதி, காணி அதிகாரத்தை வழங்காமல் ஏமாற் றுகின்ற அரசுக்குக் கூட்டமைப்பு முண்டு கொடுத்துக் காப்பாற்றக் கூடாதென்ற உணர்வு மக்கள் மத்தி யில் கொந்தளிப்பாக இருப்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம்.

அந்த அடிப்படையிலேதான் தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் குழு கூடி, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை யிலே தமிழீழ விடுதலை இயக்கத் தின் இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்கள் அடங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 பேர் கொண்ட நாடாளுமன்றக் குழு என்ன செய்ய வேண்டுமென விவாதித்தோம். அதில் ஒருவர் கூட இந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவேண்டுமென்று சொல்லவில்லை.

ஆகவே இந்த வாக்கெடுப்பில் கூட்டமைப்பு கலந்து கொள்ளக் கூடாது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக் கின்றோம்.

பௌத்த விகாரைகளை அமைப் பது, தமிழ் நிலத்தை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருக்கும் காரணத் தால் இனிமேலும் இந்த அரசை ஆதரிப்பதில் எந்தவிதமான நியாய மான காரணங்களும் இல்லாமல் போய்விட்டதென்பதை இந்த நாட் டுக்கும் உலகுக்கும் தெரிவிப்பதற்கு இந்த அருமையான சந்தர்ப்பத்தைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் 14 பேரும் நிறைவேற்ற வேண்டும் – என்றார். (ஐ – 07)

# பாகிஸ்தானியப் பிரஜை ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, ஜூலை 12

2 கிலோ 85 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பாகிஸ்தான் பிரஜையொரு வர் கொள்ளுப்பிட்டிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவர் கைதுசெய்யப் பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினர் மற் றும் விசேட அதிரடிப்படையினர் முன்னெ டுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ள மையுடன், ஹெரோய்ன் போதைபொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

# குண்டுதாரியின் வங்கிக் கணக்கு விவரங்களை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு, ஜூலை 12

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்திய மொஹம்மட் இப்ராஹிம் இன்சாப் அஹமட் மற்றும் அவரது மனைவி உள்ளிட்டோரின் வங்கிக் கணக்கு விவரங்களைச் சி.ஐ.டி.க்கு வழங்க அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க குற்றப் புலனயவுப் பிரிவு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். (ஐ)

இப்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகி, வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் பிற இடங்களிலும், புலம் பெயர் தேசங்கள் எங்கனும் இலங்கை நேரப் படி அதி காலையில் தினசரி தவறாமல் நாளிதழ் வடிவத்தில் தமிழ் மக்களை எட்டும் ஒரே பத்திரிகை

காலைக்கதிர் Kalaikathir

'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல் மூலம் 'காலைக்கதிர்' நாளிதழை தினசரி இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்பு கொண்ட பல்லாயிரம் வாசகர்களுக்கு அணிகள் அணி களாகப் பிரித்து அதிகாலையிலேயே அஞ்சல் செய்து வருகி றோம். விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்

kalaikkathirpaper@gmail.com
என்ற மின்னஞ்சல் மூலம்
அல்லது




0094 - 21 - 222 3000
என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

புலம்பெயர் தேசத்தில் உள்ள பல்லாயிரம் தமிழ் மக்களையும் உங்கள் 'காலைக்கதிர்' தினசரி அதிகாலை வேளையிலேயே தவறாமல் நாளிதழ் வடிவத்தில் எட்டுவதால், மரண அறிவித்தல், நினைவஞ்சலி உட்பட பிற விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க காலைக்கதிரை நீங்கள் நாடலாம்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
முகாமையாளர், 'காலைக்கதிர்'
தொலைபேசி இலக்கம்
0094 - 21 - 222 3000
0094 - 776687760

# ஈழத் தமிழர் நலன் பேண வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு புதுடில்லி அழுத்தம்!

## இந்திய நாடாளுமன்றத்தில் இணை வெளிவிவகார அமைச்சர் முரளிதரன் தகவல்

புதுடில்லி,ஜுலை12

ஈழத்தமிழர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பாக இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகளை அது நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக மத்திய இணை அமைச்சர் முரளிதரன் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி திரும்பவும், இனப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணவும் மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா எனக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதரன் பதில் அளித்து பேசினார் அவர் கூறியவை வருமாறு:–

இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததும், அங்குள்ள தமிழர்கள் உள்பட அனைத்து சமுதாயத்தினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வு காண மத்திய அரசு வாய்ப்பு வழங்கியது.

அனைத்துக் கட்சிகளுடனும் விரிவான பேச்சு நடத்தி, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான உறுதியான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் பற்றி இந்திய அரசு வலியுறுத்தி உள்ளது.



தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியம் ஆகிய விருப்பங்களை தீர்க்கும் வகையில் ஒரு தீர்வு காண்பது மற்றும் தேசிய சமரசத்துக்கான நடவடிக்கையை முன்னெடுக்கும்படி இலங்கை அரசு, அரசியல் கட்சிகள், அங்குள்ள மக்கள் ஆகியோரிடமும் இந்திய அரசு தொடந்து வலியுறுத்தி வருகிறது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

– இவ்வாறு மத்திய மந்திரி முரளிதரன் கூறினார்.

# கனிமொழி வென்ற தூத்துக்குடியில் விரைவில் இடைத்தேர்தல் வருமாம்!

## தமிழிசை சவுந்தரராஜன் கூறுகிறார்



கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி வெற்றி பெற்ற தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் வரலாம் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சிக்கு உறுப்பினர் சேர்க்கைக்கான மாவட்ட அளவிலான மேற்பார்வையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் பெரம்பலூர் அருகே சிறுவாச்சூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடந்தது. இதில் தமிழிசை சவுந்தரராஜன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் வரும்.

அத்தொகுதியில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற கனிமொழி வேட்புமனுவில், தனது கணவர், மகன் ஆகியோரது வருவாய், வசிப்பிடம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தகவல்களை மறைத்துள்ளார். அது குறித்தும், தேர்தல் நடத்தை விதி மீறல் உள்ளிட்ட குற்றச்சாட்டு குறித்தும் நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். 2 ஜி வழக்கும் விரைவில் விசாரணைக்கு வர உள்ளது. அந்த வழக்குகளின் விசாரணையின் முடிவில் தூத்துக்குடி தொகுதிக்கு இடைத்தேர்தல் வரலாம்.

பாரதீய ஜனதாவின் உறுப்பினர் சேர்க்கைக் காக தமிழகம் முழுவதும் நான் சுற்றுப் பயணம் செய்ய உள்ளேன்.– இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகாவில் குமாரசாமி அரசின் ஆயுள்காலம் ஓரிரு நாளில் முடியும்

## அடித்துக் கூறுகின்றார் எடியூரப்பா



பெங்களூரு,ஜுலை12

கர்நாடகத்தில் கூட்டணி ஆட்சி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. குமாரசாமியின் ஆட்சி இன்னும் ஓரிரு நாள்கள்தான் உயிருடன் இருக்கும் என்று அம்மாநில எதிர்க்கட்சி தலைவர் எடியூரப்பா கூறியுள்ளார்.

பெங்களூருவில் கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சி தலைவர் எடியூரப்பா நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

சுதாகர் எம்.எல்.ஏயின் மனைவி எனக்கு போன் செய்தார். அப்போது தனது கணவரை காப்பாற்றி கொடுக்கும்படி கூறினார். இதனால் விதான் சவுதாவுக்குள் நானும், ஏனைய பாரதீய ஜனதாவினரும் வந்தோம். சுதாகர் எம்.எல்.ஏ.வுக்கு ஆளுநர் மற்றும் பொலிஸ் ஆணையாளர் பாதுகாப்பு வழங்க வேண்டும். அத்துமீறலுக்கும் ஓர் எல்லை உள்ளது.

மந்திரி பிரியங்க் கார்கே, காங்கிரஸ் தலைவர் தினேஷ் குண்டுராவ் ஆகியோர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்து வருகின்றமையால் மாநில அரசு பெரும்பான்மையை இழந்து விட்டதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதனால் குமாரசாமி தனது முதல் மந்திரிப் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

கர்நாடக அரசியலில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து வெள்ளிக்கிழமை (அதாவது இன்று) கட்சி மேலிடம் கூற உள்ளது. அதன் பிறகு டெல்லிக்கு சென்று மேலிட தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவேன்.



கூட்டணி ஆட்சி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. குமாரசாமியின் அரசு ஓரிரு நாள்கள் மட்டும்தான் உயிருடன் இருக்கும். – இவ்வாறு அவர் கூறினார்.




காரைநகர் பலகாடு (இராஜபுரம்) சப்த கன்னிகள் எனவும் நாச்சிமார் கோவில் எனவும் அழைக்கப்பட்ட திருவருள் சக்திமிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

கும்பபிஷேக தின சங்காபிஷேகம் - 2019



நிகழும் மங்களகரமான விஹாரி வருஷம் ஆனிமாதம் 28ஆம்நாள் (13.07.2019) சனிக்கிழமை காலை 07.00 மணி முதல் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் அதைத் தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற அம்பாள் அருள்பாலித்துள்ளார்.

சங்காபிஷேகத்தை தொடர்ந்து சிறப்பு பூஜைகள் நடைபெற்று அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை நடைபெற்று அம்பாள் வீதி வலம் வருவார்.

பிற்குறிப்பு: இரவு திருவிழா நிறைவடைந்தவுடன் உள்ளூர் மற்றும் யாழ். நகர் செல்வதற்கு சிறப்புப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலய தர்மகர்த்தா
ஆலய பரிபாலன சபை.

# ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலாவுக்கு பொது நிகழ்வில் உடல்நடுக்கம்

ஜேர்மன் தலைவர் ஏஞ்சலா மெர்க்கல் மீண்டும் உடல் நடுக்கத்துடன் பொது நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அந்நாட்டின் பேர்லின் நகரில் பின்லாந்து பிரதமர் அன்டி ரினியுடன் அவர் பொது நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார். அப்போது அவரது உடல் நடுங்கியது. ஆனாலும்ஏஞ்சலாதொடர்ந்துநிகழ்ச்சியில்பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சில பிரச்சனைகளுடன் தாம் பணியாற்றுகிறார் எனவும், ஆனால் உடல்நலத்தில் பெரும் பாதிப்பு இல்லை எனவும் கூறினார்.



ஏற்கனவே ஜுன் மாதம் 18 ஆம் திகதி உக்ரைன் அதிபர் விளாடிமிர் செலன்ஸ்கியுடன் பங்கேற்ற நிகழ்ச்சியின் போதும், அதே மாதம் 27 ஆம் தேதி ஜேர்மன் அதிபர் பிராங்க் வால்டர் செயின்ட்மியருடன் நிகழ்ச்சியில் பங்கேற்ற போதும், ஏஞ்சலா மெர்க்கலின் உடல் நடுங்கியது.

முதல் நிகழ்வின் போது நீர்சத்து குறைபாட்டால் உடல் நடுங்கியதாக விளக்கம் அளித்த மெர்க்கல், பின்னர் இதுகுறித்து விளக்கம் எதுவும் அளிக்கவில்லை.

2005 ஆம் ஆண்டில் இருந்து ஜேர்மனியின் பிரதமராக இருக்கும் ஏஞ்சலா, அடுத்து வரும் 2021 ஆம் ஆண்டில் நடைபெறும் தேர்தலில் போட்டியிடப் போவது இல்லை என்று கூறியுள்ளார்.

பொதுவாக நரம்பு தளர்ச்சி, உடல் பலவீனம், மன அழுத்தம், அதிகமாக காப்பி குடிப்பது, சில மருந்துகளின் பின் விளைவு எனப் பல்வேறு காரணங்களால் உடல் நடுக்கம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவுக்கான பிரி. தூதுவர் சர்சைகளை அடுத்து ராஜினாமா



சர்ச்சைக்குரிய செய்திப் பரிமாற்றங்கள் வெளியான நிலையில், அமெரிக்காவுக்கான இங்கிலாந்து தூதர் டரோச் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அமெரிக்காவுக்கான இங்கிலாந்து தூதர் சர் கிம் டரோச் டிரம்பை திறமையற்றவர் என விமர்சித்துத் தன் நாட்டுக்கு அனுப்பிய செய்திப் பரிமாற்றம் கடந்த ஞாயிறன்று அமெரிக்க செய்தித் தாளில் வெளியானது. இதில் டரோச்சுக்கு ஆதரவாக இங்கிலாந்து பிரதமர் தெரசா மே பேசியிருந்த நிலையில், டரோச்சிடம் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளப் போவதில்லை என அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில்தான் பதவியில் இருப்பது பயனற்றது என்றும், யூகங்களுக்கு மத்தியில் தான் பதவியில் நீடிப்பது சாத்தியமற்றது என்றும் கூறி சர் கிம் டரோச் ராஜினாமா செய்துள்ளார்.

இது மிகப்பெரிய வருத்தத்தின் விளைவு என தெரசா மே கூறியுள்ளார்.

(உ)

# சீனாவில் பெருமழையால் 16 லட்சம் மக்கள் பாதிப்பு



சீனாவில் தொடர்ச்சியாக பெய்த கனமழையில், 16 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிக்கு உட்பட்ட ஜியாங்சி, ஹுனான், குயாங்சிஜுயாங் , குய்சோ உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில தினங்களாக இடி, மின்னலுடன் கனமழை பெய்தது.

தொடர் மழையால், சாலைகளில் வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து ஓடிய நிலையில், சுமார் ஒரு லட்சத்து 26 ஹெக்டேர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும் 1,600க்கு மேற்பட்ட வீடுகள் கனமழையில் இடிந்து விழுந்தன.

இந்நிலையில், பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளதை உறுதி செய்துள்ள அந்நாட்டின் அவசர மேலாண்மை அமைச்சகம், கனமழையில், சுமார் 16 லட்சத்து 34 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளது.

(உ)

உ
சிவமயம்
சிவபூமி திருவாசக அரண்மனை
நாவற்குழி, யாழ்ப்பாணம்

திருவாசக விழாவும், சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் கும்பாபிஷேக தின நிகழ்வும்

திருவாசக விழா: 12.07.2019 பிற்பகல் 4.00 மணி கும்பாபிஷேக தினம் : 13.07.2019 காலை 7.00மணி

திருவாசக விழா
காலம்: 12.07.2019 (வெள்ளிக்கிழமை)
நேரம்: பிற்பகல் 4.00 மணி
தலைமை: கலாநிதி ஆறு. திருமுருகன்
விசேட பூசை வழிபாடு
மங்கள விளக்கேற்றல்
பஞ்சபுராணம்
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (முதல்வர் – நல்லை ஆதீனம்)
வாழ்த்துரைகள்: வைத்திய நிபுணர் வ.மனோமோகன் (ஆஸ்திரேலியா)
பேராசிரியர்அ.சண்முகதாஸ்(முன்னாள்கலைப்பீடாதிபதி–யாழ்.பல்கலைக்கழகம்)
5.30 - 6.30: திருவாசகம் சிறப்பு அரங்கு
மூத்த ஓதுவார் திருமுறைக்கலாநிதி
திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள் (இந்தியா)
6.30 - 7.00: பரத நாட்டிய அரங்கு
கூத்தன் இவ்வானும் குவலயமும்
(பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்கள்)
இரவு 7.30: விருந்துபசாரம்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.


நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை
சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில்
முதலாவது ஆண்டு கும்பாபிஷேக தினம்
காலம்: 13.07.2019 காலை 07.00 மணிமுதல்
கிரியாகால விபரம்
2.07.2017 வெள்ளிக்கிழமை மாலை: பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்
13.07.2017 சனிக்கிழமை காலை: 108 சிவலிங்கங்களுக்கு விசேட பாற்குட அபிகேமும் சிவதெட்சணாமூர்த்தி சிறப்பு அபிகேமும் நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும்.
அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து அபிகேம் மற்றும் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு சிவதெட்சணாமூர்த்தியின் பேரருளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
சிவபூமி அறக்கட்டளை

அன்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாக்களில் கலந்து கொண்டு நல்லருள் பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்

சிவபூமி திருவாசக அரண்மனை
ஏ-9 வீதி, நாவற்குழி.

நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.





# கட்டுடற்கட்டு போட்டியில் 70 வயதில் வென்ற மூதாட்டி

**அமெரிக்காவைச் சேர்ந்த 70 வயது மூதாட்டி கட்டுடற்கட்டு போட்டியில் சம்பியன் பட்டம் பெற்று அசாத்திய சாதனை புரிந்துள்ளார்.**

மிசவுரி பகுதியைச் சேர்ந்தவர் ரெபேக்கா வூடி. 70 வயது நிரம்பிய ரெபேக் காவுக்கு தனது உடலை ஆண்கள் போல கட்டுடலாக வைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இதையடுத்து 1982 ஆம் ஆண்டு உடற்பயிற்சிக் கூடத்தில் சேர்ந்த அவர், ஆண்களுக்கு நிகராக அனைத்து உடற்பயிற்சிகளையும் மேற்கொண்டார்.

தொடர்ந்து மருத்துவர்களின் ஆலோசனைப் படி உணவு பழக்கத்தை மாற்றியவர் சொந்தமாக உடற்பயிற்சி கூடம் தொடங்கி பெண்களுக்கு சிறப்பு பயிற்சி கொடுத்து வருகிறார். இந்நிலையில் மிசவுரியில் நடந்த கட்டுடற்கட்டு சாம் பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று பெண் கள் பிரிவில் பட்டம் பெற்றுள்ளார் ரெபேக்கா.



# நாவற்குழி விகாரை நாளை திறப்பு

தமிழர் தாயகம் வடமாகாணம் யாழ்ப்பாணம், நாவற்குழிப் பிரதேசத்தில் இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்தின் கீழ் இயங்கும் இலங்கைத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அனுமதியுடன் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்போடு புதிதாகக் கட்டப்பட்ட விகாரை நாளை 13 ஆம் திகதி இரவு ஏழு மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. நாவற்குழி சம்புத்தி சுமன விகாரைத் திறப்பு விழா எனப் பெயரிடப்பட்ட அழைப்பிதழ் கொழும்பில் உள்ள பிரமுகர்களுக்கு அதிகாரபூர்வமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் 2010 ஆம் ஆண்டு முதன் முதலாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாவற்குழிப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றது. ஆரம்பத்தில் 45 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

பின்னர் 2015 ஆம் ஆண்டு 48 சிங்களக் குடும்பங்களுக்கு நாவற்குழிப் பிரதேசத்தில் காணி அனுமதிப் பத்திரம் மைத்திரி – ரணில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு விகாரை ஒன்றைக் கட்டுவதற்காக காணி ஒதுக்கப்பட்டு, கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதற்கெதிராக சாவகச்சேரிப் பிரதேச சபை, சாவகச்சேரி நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது.

காணி உறுதிப்பத்திரங்கள் உள்ளிட்ட உரிய ஆவணங்கள் எதுவுமின்றி விகாரை கட்டப்படுவதாகக் குற்றம் சுமத்தி, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இதனால் விகாரையைத் தொடர்ந்து கட்டுவதற்கு நீதிபதி சிறிநிதி நந்தசேனன் இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

ஆனால் சென்ற ஆண்டு ஆவணி மாதம் 30



விகாரை கட்டுவதற்கு எதிராக சாவகச்சேரி பிரதேச சபை தாக்கல் செய்த வழக்கு வாபஸ் பெற்றப்பட்ட பின்னர், அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க நாவற்குழி விகாரைக்குச் சென்று வழிபடும் காட்சி இது. பாட்டாளி சம்பிக்க ரணவக்க, 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து யானைச் சின்னத்தில் கொழும்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மகரகம தொகுதி அமைப்பாளராக சம்பிக்க ரணவக்க நியமிக்கப்படவுள்ளார். இதற்கான அனுமதியை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழு வழங்கியுள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஆம் திகதி உரிய ஆவணங்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. விகாரை கட்டப்படும் காணி இலங்கைத் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரியது என்பதால் குறித்த காணியில் விகாரை கட்டுவதற்கு கொழும்பில் உள்ள வீடமைப்பு அதிகார சபையின் சிங்கள உயர் அதிகாரிகள் அனுமதி வழங்கிய கடிதம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனால் விகாரை கட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவு நீக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபையும் தமது மனுவை மீளப் பெற்றுக் கொண்டது. அத்துடன் சென்ற ஆண்டு ஒக்டோபர் பதினொராம் திகதி விகாரையைக் கட்டுவதற்கான அனுமதியையும் சாவகச்சேரி பிரதேச சபை வழங்கியுள்ளது.

அனுமதி வழங்கப்பட்டது என்பதை சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் கந்தையா வாமதேவன் கூர்மைச் செய்தித் தளத்திற்கு உறுதிப்படுத்தினார்.

இந்த நிலையில் குறித்த விகாரை அவசர அவசரமாக கட்டிமுடிக்கப்பட்டு திறப்பு விழாவும் நாளை நடைபெறவுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட சட்டத்தரணி காண்டீபன், விகாரை கட்டப்படுவதற்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பை வெளியிட்டிருக்க வேண்டும் என்றார்.

ஏனெனில், நீதிமன்றத்தில் ஆவணங்களைக் காண்பித்தால் பிரதேச சபை கட்டடம் கட்டுவதற்கான அனுமதியை வழங்கியே ஆகவேண்டும். இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் உள்ள சட்டங்கள் மூலமாக ஈழத் தமிழர்கள், தமது அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்த முடியாது.

எனவே ஈழத் தமிழர் பிரதேசங்களில் காணி அபகரித்தல், விகாரை கட்டுதல், புத்தர் சிலைகள் வைத்தல் போன்ற விடயங்களுக்கு எதிராக இலங்கை நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து நீதியைப் பெற முடியாது. ஆகவே இந்த விவகாரத்தை ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினையாகவே நோக்கியிருக்க வேண்டும் என்று காண்டீபன் கூறினார்.

இதேவேளை, புதிதாகத் திறக்கப்படவுள்ள விகாரைக்கான புனிதத் தாது, இன்று 12 ஆம் திகதி குருநாகல் நெவகட செல்கிரி விகாரையில் இருந்து காலை எட்டு மணிக்கு ஊர்வலமாக (பெரஹரா) எடுத்துச் செல்லப்படும்.

இன்று இரவு அனுராதபுரம் துபாராம சைத்திய விகாரையைச் சென்றடையும் ஊர்வலம், நாளை 13 ஆம் திகதி காலை ஏழு மணிக்கு மீண்டும் அங்கிருந்து ஆரம்பமாகி அன்றைய தினம் மாலை ஐந்து மணிக்குப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நாவற்குழி சம்புத்தி சுமன விகாரையைச் சென்றடையுமென அழைப்பிதழில் கூறப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு நல்லிணக்கம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் காலத்திலேயே இலங்கைப் படையினரின் ஒத்துழைப்போடு இலங்கை ஒற்றையாட்சியின் சட்டங்களுக்கு அமைவாக விகாரைகள் துரிதமாகக் கட்டப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு மாசி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆயிரம் விகாரைகள் கட்டப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வரும் ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான செயற்பாட்டாளர் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க, வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் விகாரைகள் கட்டும் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றார்.

நாவற்குழி விகாரையை கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர், கடந்த மாதம் அங்கு சென்ற அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க, அந்த விகாரையில் வழிபட்டார்.

ஆயிரம் விகாரைகள் கட்டப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாசவும் கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கூறியிருந்தார்.

சாவகச்சேரி பிரதேச சபை சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியிலேயே உள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உண்டு. ஆனால் அந்த அதிகாரங்கள் எதுவுமே இதுவரை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

காணி அதிகாரங்களை கொழும்பு இலங்கை ஒற்றையாட்சி அரசியல் நிர்வாகம் தம்வசப்படுத்தியுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு அல்ல. ஆனால் அந்தத் திருத்தச் சட்டத்தைக் கூட உரிய முறையில் இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கம் நடைமுறைப்படுத்த விரும்பவில்லையென தமிழ்த் தரப்பு ஏலவே குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



*நன்றி:- கூர்மை*

# கல்முனை தரமுயர்த்தப்படாவிட்டால் கூட்டமைப்பு அரசை ஆதரிக்கக்கூடாது

## கொழும்பு ரயில் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜூலை 12

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தாத பட்சத்தில் அரசுக்கு ஆதரவாக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கக் கூடாதென வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கை மக்கள் தேசிய கட்சியின் ஏற்பாட்டில் நடந்த இந்த போராட்டத்தில் வடக்கு–கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

கல்முனையைத் தரமுயர்த்தும் விடயத்தில் அரசின் ஏமாற்று நடவடிக்கையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அக்கறையீனமுமே ஞானசார தேரர் போன்றவர்களின் தலையீட்டுக்கு வழி சமைத்துள்ளதாகக் குற்றம்சாட்டியுள்ள இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் என். விஷ்ணுகாந்தன், ஞானசார தேரரின் வாக்குறுதியை நம்பி போராட்டத்தைக் கைவிட்டமை, குளம் வற்றுமெனக் கொக்கு காத்திருந்தமைக்கு ஒப்பானது எனக் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினை தீர்வு, போர்க்குற்றம் போன்ற பெரிய விடயங்களை நாம் வலியுறுத்தவில்லை. கல்முனையை தரமுயர்த்தும் சிறிய விடயத்தைத் தான் வலியுறுத்துவதாகவும், இந்தக் கோரிக்கையை உடனடி நிபந்தனையாக அரசுக்கு விதிக்குமாறும் கூட்டமைப்பிடம் வலியுறுத்தினர்.

அரசு உடனடியாக இந்தக் கோரிக்கையை ஏற்காத பட்சத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து அரசை தோற்கடிக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர். (ஐ)

# உணவு ஒவ்வாமையால் சாய்ந்தமருது பகுதியில் மாணவர்கள் பாதிப்பு

அம்பாறை, ஜூலை 12

கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது கோட்டத்தின் கீழ் உள்ள சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலய மாணவர்களின் உணவு ஒவ்வாமை காரணமாக நேற்று முன் தினம் புதன்கிழமை 44 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டு சாய்ந்தமருதுப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்றனர்.

அதில் அதிக மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். 23 மாணவ, மாணவிகள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் 450 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். சகல மாணவர்களுக்கும் பாடசாலை உணவகத்தில் உணவுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

திடீரென மாணவர்கள் பலரும் வயிற்று வலிக்கு ஆளானமையைத் தொடர்ந்து வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுச் சிகிச்சை வழங்கப்பட்டது.

பல வருடங்களாகப் பாடசாலையில் உணவகம் நடத்தி வரும் உசைன் என்பவரின் உணவகத்தில் உணவருந்திய மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டாலும் எதனால் இந்தப் பாதிப்பு வந்தது என்பதை இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கமுடியாமல் உள்ளதாகச் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயம் தெரிவித்தது.

பாடசாலை உணவகத்தைத் தற்காலிகமாக மூடிவிட்டு மாணவர்கள் சாப்பிட்ட உணவின் பகுதிகளையும், மாதிரிகளையும் சாய்ந்தமருது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எடுத்துச் சென்று கொழும்புக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர். (ஐ)

# மிருசுவிலில் 50 ஏக்கர் காணியை ராணுவத்தினர் சுவீகரித்துள்ளனர்

## மீட்டுத் தரக் கோருகின்றார் வயோதிபத் தாய்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 12

தென்மராட்சி, மிருசுவில் – ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள 50 ஏக்கா காணியைத் தன்னிடமே திருப்பி வழங்குமாறு காணி உரிமையாளரான தம்பிராசா மகேஸ்வரி என்ற தாய் உருக்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளமையுடன், மாற்றுக் காணி மற்றும் இழப்பீடு வேண்டாம் எனவும் நிராகரித்துள்ளார்.

இந்த விடயம் தொடாபாக நேற்று முன் தினம் மாலை யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்–

2011ஆம் ஆண்டு சுமார் 5 லட்சம் ரூபா செலவு செய்து எனது காணியைத் துப்புரவு செய்தேன்.

2012ஆம் ஆண்டு எனது காணிக்குள் அடாத்தாகப் புகுந்த இராணுவத்தினர், காணிக்குள் நுழையக்கூடாது எனக் கூறியமையுடன், அதனைச் சுவீகரித்துவிட்டனர். பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாக வழக்கு தொடர்ந்தபோதும் தென்னம் தோட்டத்தை விடவும் தேசிய பாதுகாப்பு முக்கியமானது என்று தெரிவிக்கப்பட்டது.

எனது காணியில் இராணுவத்தினா நிரந்தரமாகக் குந்திவிட்டனர். சுமார் 50 ஏக்கா காணியை எனது பிள்ளைகள், மருமக்கள், மற்றும் பேரப் பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்திருக்கிறேன். எனது பிள்ளைகள் நான் வாழ்ந்த அந்தக் காணியில் வாழவேண்டும் என ஆசைப்படுகின்றார்கள்.

எனது காணியை மீட்க நான் செல்லாத இடமே இல்லை. கடைசியாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடாக மேன்முறையீடு செய்திருக்கின்றோம். அவா நீதியைப் பெற்றுக் கொடுப்பார் என நம்புகிறேன். பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனிடம் சென்றிருந்தேன்.

அவர் கூறுகிறார், எனது காணி இராணுவத்துக்காக எடுக்கப்பட்டுவிட்டதாம். ஆகவே மாற்றுக் காணி தருகிறாராம். அதுவும் யாழ்ப்பாணத்தில் மாற்று காணி வழங்கக் கூடிய வசதிகள் இல்லை. ஆகவே வேறு மாவட்டங்களில் மாற்றுக் காணிகள் தருவதாகவும், அதுவும் இலங்கையில் வாழ்பவாகளுக்கு சொந்தமான 25 ஏக்கா காணிக்கான மாற்றுக் காணியே தருவதாகவும், வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிகளைத் தரமாட்டோம் எனவும் சொல்கிறார்.

எமக்கு எங்களுடைய காணி வேண்டும். மாற்று காணிகள், இழப்பீடுகள் வேண்டாம் – என்றார். (ஐ–07)

# கட்டைக்காடு றோ.க.த.கவில் உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் உயர்தர வகுப்பை ஆரம்பிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு உயர்தர வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அங்கு க.பொ.த. உயர்தரப் பிரிவைப் புதிதாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை பாடசாலை அதிபர் த.யோகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மங்கள விளக்குகளைக் கட்டைக்காடு பங்குத்தந்தை மைக்றொனால்ட், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் ஏற்றினர்.



இந்த நிகழ்வில் புதிய உயர்தர மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

northern PC Park

கணினி உலகில்
நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு
மேலாக யாழ் மண்ணில்

வடக்கின்
கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள
நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# இந்திய அணி சொதப்பல் இறுதிக்குள் நியூஸிலாந்து







நடைபெற்றுவரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணி 18 ஓட்டங்களால் வெற்றியைச் சுவீகரித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில் இந்திய அணி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்து வெளியேறியது.

மன்செஸ்டரில் உள்ள எமிரேட்ஸ் ரப்போர்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 46.1 ஓவரில் 211 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழையால் போட்டி இடைநிறுத்தப் பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் நடைபெறவில்லை. இதையடுத்து போட்டி நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பாக, ரோஸ் ரெய்லர் 74 ஓட்டங்களையும், வில்லியம்ஸன் 67 ஓட்டங்களையும், நிக்கோலஸ் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், புவனேஸ்குமார் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அத்துடன், பும்ரா, கார்த்திக் பாண்டியா, ஜடேஜா மற்றும் யுஸ்வேந்திர சாகல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் 240 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர்.

லோகேஸ் ராகுல், ரோஹித் சர்மா மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் ஒவ்வொரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதனால் கடும் நெருக்கடிக்கு உள்ளான இந்திய அணி, டோனி மற்றும் ஜடேஜாவின் இணைப்பாட்டத்தின் உதவியுடன் ஓட்டங்களைக் குவித்தது.

எனினும் ஜடேஜாவின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து, இந்திய அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அந்த வகையில் 18 ஓட்டங்களால் இந்தியா தோல்வியைத் தழுவியது.

இந்திய அணி சார்பாக ஜடேஜா 77 ஓட்டங்களையும், டோனி 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தமையோடு, ரிஷப் பந்த் மற்றும் கார்த்திக் பாண்டியா ஆகியோர் தலா 32 ஓட்டங்க ளைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், மற் ஹென்றி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு, ரென்ற் போல்ட், மிற்செல் சான்ட்னர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து நியூஸிலாந்து அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (ஐ)

# இந்தப் போட்டி எங்களுக்கானது

"இந்தப் போட்டி எங்களுக்கானதாக அமைந்துவிட்டது. இது ஒட்டுமொத்த வீரர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகத் தான் நான் பார்க்கிறேன். எங்கள் வீரர்கள் மிகச்சிறப்பாக செயற்பட்டனர். துடுப்பாட்டத்தில் அசுர பலம் கொண்டுள்ள இந்திய அணியை ஆரம்பத்தில் இருந்தே நெருக்கடியுடன் வைத்து கொண்டதே எங்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது" – என நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் –

"ஜடேஜா மற்றும் டோனி ஆகிய இருவரும் சிறப்பாக விளையாடி வெற்றியை நெருங்கி விட்டனர், இருந்தாலும் ஒரு சில விடயங்கள் போட்டியை அப்படியே மாற்றிவிடும். அதுவே இப்போட்டியிலும் நடைபெற்றது. கடந்த தொடர்களை விட இந்தத்தொடர் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது, இறுதிப் போட்டியிலும் சிறப்பாகச் செயல்பட்டுச் சம்பியன் பட்டத்தை வெல்வோம்.

இது ஒரு வித்தியாசமான உணர்வு. கடந்த உலகக் கிண்ணத்தில் நாம் முகங்கொடுத்த விடயங்களுடன் ஒப்பிடும் போது இந்தப் போட்டி முற்றிலும் வேறுபட்ட அனுபவத்தைக் கொடுத்துள்ளது. இது ஒரு கடினமான அரையிறுதிப் போட்டியாக இருந்தது. ஆனால் எமது வீரர்கள் விளையாடிய விதம் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது மிகவும் கடினமாக இருந்தது.

"இந்தப் போட்டியில் எமது அணியில் உள்ள ஒவ்வொரு வீரரினதும் கதாபாத்திரம் பரிசோதிக்கப்பட்டது. ஆனால் அதையும் தாண்டி நாங்கள் மேலே வந்தோம். ஒரு சில போட்டிகளில் நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தன என்று நாங்கள் கண்டிருக்கிறோம். சில போட்டிகளில், நாங்கள் எங்கள் சிறந்த கிரிக்கெட்டை




விளையாடவில்லை, ஆனால் எமது வீரர்கள் சோர்வடையவில்லை

"240 – 250 ஓட்டங்களை எடுத்தால் இந்தியாவை அழுத்தத்திற்கு உட்படுத்த உதவும் என்று நாங்கள் நினைத்தோம். எமது பந்து வீச்சாளர்கள் அதை நடத்தர மற்றும் பின் வரிசையில் இலகுவாகக் கையாண்டனர். அதேபோல முதல்நாள் முழுவதும் மழை பெய்ததால், அந்த நிலைமைகளையும் அது மாற்றியது.

புதிய பந்தைக் கொண்டு, எங்கள் பந்து வீச்சாளர்கள் பந்தை வேகமாக வீசுவதற்கு முயன்றனர். இந்தியா போன்ற உலகத்தரம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அணிக்கு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அதேபோல ஆடுகளம் மெதுவாக இருக்கும்போது, அதில் எவ்வாறு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.லோர்ட்ஸ் மைதானத்தில் இறுதிப் போட்டியில் விளையாட கிடைத்தமை மிகவும் சிறப்பு வாய்ந்தது, அதேபோல அனைத்து நியூசிலாந்து ஆதரவாளர்களுக்கும் நன்றி. எனவே, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இறுதிப் போட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" – என்றார். (ஐ)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது வலைப்பாடு




கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியோடு சுடரொளி விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 09 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மோரீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

# அபார வெற்றி பெற்றது இளவாலை சென்.லூட்ஸ்



யாழ் லீக்கின் அனுசரணையில் உரும்பிராய் திருக்குமரன் அணியின் முன்னாள் வீரர் சோபநாத் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் மோதியது.

ஆட்ட நேர முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் சென்.லூட்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

சென்.லூட்ஸ் அணி சார்பாக அமல் ராஜ் 02, அமல், தனு ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர்.

## தான் முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது எம்மிடம் கேட்டிருந்தார்.

–இவ்வாறு நேற்றுப் பரபரப்புத் தகவலை வெளியிட்டார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பதவி ஆசைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உறுதியான அரசியற் பேரியக்கம் ஒன்றை எம்முடன் இணைந்து உருவாக்க நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

விக்னேஸ்வரனுடனான கூட்டணிஏன் வெற்றிபெறவில்லை என்பது குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைவென்றெடுக்கும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும்நீதியரசர்விக்னேஸ்வரனும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வலுவான கருத்து நிலை உருவாகியுள்ள இன்றைய சூழலில், எமக்கும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் இடையிலான பேச்சுகள் பின்னடைவைச் சந்தித்திருப்பதாக ஊடகங்களில் வெளியாகிவரும் செய்திகள் தொடர்பில் எமது மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய தேவை கருதி எமது தரப்பு நியாயத்தை இந்த ஊடக அறிக்கை மூலமாகமுன்வைக்கவிரும்புகின்றோம்.

எமது மக்களின் விருப்புக்கு அமைவாக நாங்கள், நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து கொள்கைவழி கூட்டு ஒன்றை உருவாக்க இதயசுத்தியுடன் செயற்படத் தயாராக இருக்கின்றோம் என்ற விடயத்தை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஆணித்தரமாகத் தெரிவித்து வந்திருக்கின்றோம். நாம் அந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றோம் என்பதை மீளவலியுறுத்தவிரும்புகின்றோம்.

இவ்வாறு நீதியரசர் விக்னேஸ்வரனுடனான கொள்கைவழி கூட்டுக்கு நாம் தயாராயிருந்த சூழலில், அந்தக் கூட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை இணைத்துக்கொண்டால் மாத்திரமே தான் எம்முடன் கூட்டிணைவேன் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வைக்கும் தமிழ் மக்களின் கொள்கைவழி அரசியலுக்கு மாறான கோரிக்கையே எமது கூட்டிணைவைச் சாத்தியமற்றதாக்கி வருகின்றது.

மேலும் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது ஊடக அறிக்கையில் தமிழ் மக்கள் பேரவையில் இருந்துகொண்டு 'எழுக தமிழ்' நிகழ்வை நடாத்திய கட்சிகள் கூட்டிணையவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையானது ஒரு மக்கள் பேரியக்கமாக செயற்பட்டு, எந்தவித விட்டுக்கொடுப்புகளுமின்றி தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை உறுதிப்படுத்தும் ஒரு அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்காகவும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை ஒன்றினூடாக நீதியை பெற்றுக் கொடுப்பதற்காகவுமே உருவாக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே தமிழ் மக்கள் பேரவையினால் தீர்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் 2018.02.10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் தீர்மானங்களை எட்டும் பொருட்டு தமிழ் மக்கள் பேரவை 2017.11.12ஆம் திகதி கூடியபோது கொள்கைகளை கைவிட்டுப் பயணிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியையோ அதன் சின்னத்தையோ உள்வாங்குவதில்லை என்றும் அந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டமைப்பதில்லை என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

இந்நிலையில் அந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போதும் அதன் பின்னரும் தமிழ் மக்கள் பேரவையின் முடிவுகளைப் புறந்தள்ளிய ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியானது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை கைவிட்டு தேர்தலை எதிர்கொண்டதாலும் தேர்தலின் பின் இனப்படுகொலை புரிந்த மஹிந்த ராஜபக்ஷவுடனும் ஏனைய பேரினவாதக் கட்சிகளுடனும் ஒட்டுக்குழுக்களுடனும் கூட்டுச் சேர்ந்து பிதேச சபைகளைக் கைப்பற்ற முனைந்ததாலும், இவ்வருடம் நடைபெற்ற அவர்களது கூட்டமொன்றில் இனப்படுகொலை அரசை பாதுகாக்கும் விதத்தில் விடுதலைப்புலிகள் மீது போர்க் குற்றம் சுமத்திப் பிரசுரம் வெளியிட்டதாலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் நோக்கில் கொள்கை வழி பயணிக்கும் கூட்டு ஒன்றில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியுடன் நாம் சேர்ந்து எதிர்காலத்தில் பயணிப்பது சாத்தியமாகாது என்பதுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியுடனான கூட்டானது கொள்கை வழி நின்று தமிழ்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு தடையாக இருக்கும் என்ற உறுதியான நிலைப்பாட்டை நாம் எடுப்பதற்கு எம்மைத் தள்ளியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளைக் கைவிட்டு தமிழ் மக்களுக்கு தவறிழைத்துள்ளது என்றும், அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்றும் கூறுகின்றவர்கள், அதே கொள்கைகளை கைவிட்டுத் தவறுகளை இழைக்கும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடும் தரப்புகளை உள்வாங்கி ஓர் கொள்கை வழிசார் உறுதியான கூட்டு ஒன்றை உருவாக்கலாம் என்று எண்ணுவது எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் ஓர் செயலாக மட்டுமே அமைய முடியும்.

சைக்கிள் சின்னத்தில் போட்டியிடத் தயார் என்று தான் தெரிவித்த போதும் அதை நிராகரித்து நாம் கட்சி நலன்களை முன்னிறுத்தி செயற்படுவதாக நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் எம் மீது குற்றஞ்சாட்டுவது எமக்கு வேதனையளிக்கின்றது. எமது கட்சி நலனை மாத்திரமே முன்னிறுத்தி நாம் செயற்படுபவர்களாக இருந்திருந்தால் 'சைக்கிள் சின்னத்தில் போட்டியிடத் தயார்' என்ற நீதியரசரின் வேண்டுகோளை நாம் இறுகப்பற்றியிருப்போம்.

இந்தியாவின் வழிகாட்டுதலில் தான் நீதியரசர் செயற்படுகின்றார் என்று நாம் குற்றஞ்சாட்டுவதாக நீதியரசர் அவர்கள் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார். நீதியரசர் விக்னேஸ்வரனை 2018.10.06ஆம் திகதி அன்று நாம் சந்தித்தவேளை நீதியரசரே தான் சந்தித்த இந்திய தூதரக அதிகாரிகள் 'தான் எம்முடன் இணைவதை விரும்பவில்லை' என்றும் 'ஏன் இந்தியா உங்களை எதிரியாக பார்க்கின்றது?' என்றும் கேட்டிருந்தார்.

இந்தியாவின் நலன்களுக்காக மட்டுமே செயற்பட்டுவருகிறார்கள் என்று தமிழ் மக்களால் கருதப்படும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி இன்றி அரசியல் கூட்டு இல்லை என்றும், ஈ.பி.ஆர்.எல். எவ்வுடனான தனது கூட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணையத் தயாரில்லை என்றால் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியுடன் தனித்து கூட்டிணைந்து செயற்பட போவதாகவும் ஓர் நிலைப்பாட்டை நீதியரசர் எடுத்திருப்பது மிகவும் வேதனையான ஓர் விடயம் என்பதுடன் அது தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை முற்றாக சீரழித்துவிடும் என்பதையும் மிகுந்த பொறுப்புடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் கொள்கைகளை முன்னிறுத்தி பயணிப்பதாக உறுதிமொழி அளித்து விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் பின்னர் அந்தக் கூட்டமைப்பானது இன்று கொள்கை வழிமாறி தடம்மாறி பயணிப்பதால் தமிழ் மக்கள் அதனை நிராகரிக்க வேண்டும் என இன்று நீதியரசரும் நாங்களும் எதற்காக கோருகின்றோமோ அதே நியாயமான காரணத்திற்காகவே ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியையும் நிராகரிக்கவேண்டும் என்று நாம் கூறுகின்றோம்.

தமிழ் மக்களின் தனித்துவமான இறைமை கொண்ட தேசத்தை உருவாக்குகின்ற கொள்கைவழி அரசியல் பயணத்தில் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளை முற்றாக நிராகரித்து கொள்கைகளில் மிகவும் பற்றுறுதி கொண்டவர்களை ஒன்றிணைத்து பதவி ஆசைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உறுதியான அரசியற் பேரியக்கம் ஒன்றை எம்முடன் இணைந்து உருவாக்க நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வர வேண்டும் என்று திறந்த மனதுடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்–என்றுள்ளது.

(ஐ–07)

## அமைச்சுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புக் கூட்டம் நாடாளுமன்றவளாகத்தில் நேற்று மாலை நடந்தது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மீண்டும் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்ளுமாறு, மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிவிடுத்த கோரிக்கை குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அத்துடன், பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்துக் கைது செய்யப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி மற்றும் பிரதமர் வழங்கிய உறுதிமொழி தொடர்பிலும் இதன்போது கருத்துப் பரிமாறப்பட்டது.

நாட்டின் நிலமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு, வழமை நிலை திரும்பியுள்ள நிலையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வகித்த அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள், பிரதி அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களை ஏற்றுக்கொள்வது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தனிப்பட்ட பயணமாக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று நாடு திரும்பும் நிலையில் நாளை சனிக்கிழமை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன் மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரைப் பதவி விலகக் கோரி, அத்துரலிய ரத்ன தேரர் நடத்திய உணவு ஒறுப்புப் போராட்டத்தை அடுத்து, எழுந்த சூழ்நிலைகளால், அரசில் அங்கம் வகித்த முஸ்லிம்களான அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் 9 பேர் கடந்த ஜூன் 03ஆம் திகதி பதவி விலகினர்.

எனினும் அவர்கள் 9 பேரில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களான கபீர் ஹாசிம் மற்றும் எம்.எச்.ஏ. ஹலீம் ஆகியோர் கடந்த 19ஆம் திகதி மீண்டும் தமது அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்று பிரதமர் மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசும் பதவி விலக வேண்டும் எனக் கோரி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று முன்தினமும் நேற்றும் விவாதங்கள் நடைபெற்றன.

விவாதங்களையடுத்து நேற்று மாலை 6.30 மணியளவில் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் பங்காளிக் கட்சிகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

அதேவேளை, எதிர்க்கட்சி வரிசையிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் வாக்களிப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனும் வாக்களிப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசை எதிர்த்துப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 26 அரசியல் சதிப் புரட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மைத்திரி அணிப் பக்கம் தாவிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரனும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இந்தநிலையில், பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிராத அரசு கவிழுமா அல்லது காப்பாற்றப்படுமா என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலே இருந்தது.

நேற்றுக் காலையும் மாலையும் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஆகியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

இந்தப் பிரேரணைக்கு எதிராக அதிக வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரரணை தோல்வியடைந்துள்ளது எனச் சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் அறிவித்தார்.

இதையடுத்து இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

## இந்த அரசைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று சிந்திக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த அரசு கடந்த அரசைவிடக் கொஞ்சம் பரவாயில்லை. கடந்த ஆட்சியின்போது இருந்ததைவிட இந்த அரசு மனித உரிமைகள் விடயத்தில் பரவாயில்லை. இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன செய்யப்போகிறோம்? எனவே, நாங்கள் கவனமாகச் செயற்படவேண்டும்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரி இன்று (நேற்று) திருகோணமலையில் என் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடந்தது. எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லை. இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவளிப்பதை எமது மக்கள் விரும்பவில்லை. அரசு இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கூட்டு எதிரணியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வடக்கு மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை முதலில் முன்வைக்க வேண்டும்.

அரசுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து நாங்கள் சரியான தீர்மானம் எடுப்போம்–என்றார். (ஐ)

## எந்தத் தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை அறிவிக்கும் அதிகாரம் தனக்கு முழுமையாகக் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் பழிவாங்கல் , அதிகாரப் போட்டி இவ்விரண்டுக்கும் மாத்திரம் நடப்பு அரசு முக்கியத்துவம் கொடுத்தது. இதன் விளைவே இன்று ஒட்டுமொத்த மக்களையும் பாதித்துள்ளது என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிப் போர் நடைபெற்ற காலத்தில் தமிழீழ விடுதலை புலிகளால் அந்த இடத்தில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்கத்தைத் தேடியே இந்த அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பகுதிக்கு கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் பொலிஸாரின் பாதுகாப்பு போடப்பட்டு வந்த நிலையில் நேற்று அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி அதிகாலை இதே பகுதியில் தங்கத்தை தேடி ஸ்கானர்களுடன் வருகை தந்த 15 பேர் அடங்கிய குழு ஒன்றைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை மையமாக வைத்து அந்தப் பகுதியில் அகழ்வு செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இறுதிவரை அகழ்வு நடைபெற்றபோதிலும் எந்தவிதமான பொருள்களும் கிடைக்காத நிலையில் அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. (ஐ)

## சஹ்ரானுக்கு அரசின் சம்பளம்; கோட்டாவிடமும் விசாரணை!

கொழும்பு, ஜூலை 12

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின்சூத்திரதாரியானசஹ்ரான்ஹாசீமுக்கு, கடந்த ஆட்சியில் ஊதியம் வழங்கப்பட்டமை தொடர்பில் அப்போது பதவியில் இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அழைத்து விசாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர், இந்த தாக்குதல் சம்பவத்தின் பின்புலம் தொடர்பான உண்மைத் தன்மையை அறிந்துக்கொள்ளும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தெரிவுக் குழு அழைத்தால் அதற்கு அவர்கள் முகங் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

## எரிபொருள் விலை குறைப்பு முறை புதுமையானது

கொழும்பு, ஜூலை 12

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 9 டொலரால் குறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாயால் மாத்திரம் குறைவடைந்ததும் டீசல் விலை குறைவடையாதமையும் புதுமையான விடயம் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகளுக்காக லங்கா ஒட்டோ டீசல் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், லங்கா ஒட்டோ டீசல் விலை குறைக்கப்படாமை நுகர்வோரைப் பாதிக்கும் செயற்பாடு என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# இலங்கையுடன் உறவுகளை விரிவாக்க அமெ. விருப்பம்!

வாஷிங்டன், ஜூலை 12

இலங்கையுடன் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளையும், கடல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் விரிவுபடுத்துவது தொடர்பான அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப். அமெரிக்காவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் ரொட்னி எம் பெரேரா அமெரிக்க ஜனாதிபதியை வெள்ளை மாளிகையில் சந்தித்து நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்த வேளை டொனால்ட் டிரம்ப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

### தூதுவரிடம் கூறினார் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரை வரவேற்றுள்ள டொனால்ட்டிரம்ப், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அமெரிக்கா இலங்கையுடன் தோளோடு தோள் நிற்கும் என்ற தனது அர்ப்பணிப்பை மீள வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையுடன் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளையும், கடல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் விரிவுபடுத்துவது தொடர்பான தனது அர்ப்பணிப்பையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ள அமெரிக்க ஜனாதிபதி, இரு நாடுகளிடையிலான உறவுகள், ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி ஆகியவை தொடர்பான பகிரப்பட்ட அர்ப்பணிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவடைந்த பின்னர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நல்லிணக்கம் பொறுப்புக்கூறுதல், நீதி ஆகியவற்றை ஏற்படுத்துவது குறித்து இலங்கை வழங்கியுள்ள வாக்குறுதிகளையும் அமெரிக்க ஜனாதிபதி வரவேற்றுள்ளார். (ஐ)

## தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழா நவாலியில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்க நிகழ்வும் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்க உறுப்பினர் ஜீவா. சஜீவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகள் புலவரின் சிலைக்கான வழிபாட்டுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் ஆசியுரையைத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் வாழ்த்துரைகளை புலவரின் பூட்டனாரும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய சண். குகவரதன் மற்றும் நவாலி மகா வித்தியாலய அதிபர் கி. கிருஷ்ணானந்தா ஆகியோரும் ஆற்றுவர்.



ஆடிப்பிறப்புக் குறித்த சிறப்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் குறித்த நினைவுப் பேருரையை சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர்.

யாழ். முன்னணி இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் சோம சுந்தரப் புலவரின் பாடல்கள் உள்ளிட்ட தமிழிசைப்பாடல்கள் அமைந்த இசைநிகழ்வும் இடம்பெறும். இசைநிகழ்வைத் தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர்வேஸ்வரா தொகுத்து வழங்குவார். விரிவுரையாளர் வேல். நந்தகுமார் நன்றியுரை நல்குவார். (ஐ)

# பயங்கரவாதத்தைத் தடுக்கும் உத்திகளை ரணிலுக்கு விளக்கியது அமெரிக்கக் குழு!

கொழும்பு, ஜூலை 12

பயங்கரவாதத்தைத் தடுப்பதற்குக் கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் கடலோரக் காவல்படை என்பன அவசியம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், அமெரிக்கப் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை, மாலை அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தது.

21/4 தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இதன்போது அவர்கள் பிரதமருக்கு விளக்கியுள்ளனர்.

கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் கடலோரக் காவல்படை இருக்கும் ஒரு நாட்டுக்குள் ஊடுருவ முயற்சிக்கும்போது, எந்தவொரு பயங்கரவாதியும் அஞ்சுவர் என்றும் அவர்கள் கூறினர்.

புலனாய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை நிறுவி, நடவடிக்கை எடுப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக இந்தச் சந்திப்பின்போது பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

9/11 தாக்குதலுக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட பயங்கரவாதச் சந்தேக நபர்களை குடியியல் நீதிமன்றங்களில் விசாரிப்பதில் தாங்கள் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொண்டனர் என அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதம் என்பது, சாதாரண குடியியல் நீதிமன்ற முறை மூலம் விசாரிக்கப்படவேண்டிய சாதாரண குற்றம் அல்ல என்றும், அத்தகைய சந்தேக நபர்களைத் தண்டிக்க அவர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் தேவைப்பட்டன என அவர்கள் கூறினர்.

அடையாளம் காணப்பட்ட பயங்கரவாதச் சந்தேக நபர்கள் தொடர்பாக எல்லைக் கட்டுப்பாட்டுத் தரவு அமைப்புகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களையும் அமெரிக்க நிபுணர்கள் பகிர்ந்து கொண்டனர்.

தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் மொஹமட் சஹ்ரான் இஸ்லாமிய அரசின் (ஐ.எஸ்.) இலங்கைக்கான முகவராகத் தன்னை அங்கீகரிக்குமாறு கோரியிருந்தார் என்பதை அமெரிக்கக் குழு கண்டுபிடித்திருப்பதாகவும் இதன்போது தெரிவித்துள்ளது. (ஐ)

# தாஜ் சமுத்திராவில் தங்கியிருந்தோர் பட்டியல் கோருகின்றது தெரிவுக் குழு

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற ஏப்ரல் 21ஆம் திகதி, தாஜ் சமுத்திரா விடுதியில் தங்கியிருந்தவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும், அங்கு காலை உணவு சாப்பிட்டவர்களின் பட்டியலையும் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றத் தெரிவுக் குழு கோரியுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நேற்று முன்தினம் நடந்த அமர்வின்போது, தெரிவுக் குழுவின் தலைவர் ஆனந்த குமாரசிறி இதனைத் தெரிவித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள், தாஜ் சமுத்திரா விடுதியில் குண்டை வெடிக்க வைக்கும் திட்டத்தை ஏன் கைவிட்டனர் என்ற கேள்விக்கான விசாரணைகளை முன்னெடுக்க இந்தப் பட்டியல் உதவும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஏப்ரல் 21 தாக்குதலுக்கு ஜனாதிபதியே பொறுப்பு

### சபையில் கூட்டமைப்பு வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 12

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பிரதான மாகப் பொறுப்புக் கூறவேண்டியவர் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் தாக்குதலில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த உயிரிழப்புக்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டன, என்ன காரணம் எனக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதனடிப்படையிலே இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமருமே பதில் கூறக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

சர்வதேச புலனாய்வுத்துறையினர் துல்லியமான தகவல்களை எமது நாட்டின் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கியிருந்தனர். எனினும் இந்தத் தகவலைப் பெற்று அரசு சரியாகச் செயற்படாத காரணத்தால் ஏற்பட்ட இந்த இழப்புக்களுக்கு இரு தரப்பினரும் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

ஆனாலும் இதற்கான கூடுதல் பங்கை ஜனாதிபதி ஏற்கவேண்டும். ஏனென்றால் நாட்டின் பாதுகாப்புத்துறை, சட்டம்,ஒழுங்கு போன்ற துறைகள் அவரிடமே இருக்கின்றன. அவர் உரிய நேரத்தில் பாதுகாப்புச்சபையைக் கூட்டி நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். எனவே, இந்தப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும்.

இதேவேளை, சஹ்ரானின் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் 185 பேரே இருக்கின்றனர் எனப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். ஆனாலும் ஆயிரக்கணக்கில் அவர்கள் இருக்கின்றனர் – என்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2019 இல் வெளியிடப்பெற்றது.